பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 02 செவ்வாய்க்கிழமை (18.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 232

## இந்தோனேசியாவின் ஜாவா கரையை பலமான ஆழிப் பேரலைகள் தாக்கின!



சின்னாபின்னமான கட்டடம் ஒன்று...

### 80இற்கும் மேற்பட்டவர்கள் பலி! கட்டடங்கள் நாசம்!! பலரைக் காணோம்!!!

ஜகாந்த்தா, ஜூலை 18

இந்தோனேசியாவின் ஜாவா தீவுக் கரைகளை பலமான ஆழிப்பேரலைகள் தாக்கியிருக்கின்றன.

ஆழ் கடலில் ஏற்பட்ட பெரும் நில நடுக்கத்தை அடுத்தே இந்த ஆழிப்பேரலைகள் (சுனாமி) உருவாகி கரையோரப் பகுதிகளைத் தாக்கியிருக்கின்றன.

ரிச்டர் அளவில் 7.2 எனப் பதிவாகிய பலமான நிலநடுக்கம் ஜாவாவின் பன்கன்டரன் நகரத்தை ஊடறுத்துத் தாக்கியிருக்கின்றது.

இந்த நிலநடுக்கம் காரணமாக கடலில் இரண்டு மீற்றர் முதல் ஆறு மீற்றர் வரையான உயரத்துக்கு பேரலைகள் எழுந்து கரையோரப் பகுதிகளைத் தாக்கின என்று அறிவிக்கப்படுகிறது.

இலங்கை நேரப்படி நேற்றுப்பிற்பகல் 4 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் தகவலின்படி சுமார் 44பேர் உயிரிழந்திருக்கின்றனர் என்பது உறுதிப்படுத்தபட்டிருக்கிறது. கடலில் சீறி எழுந்து வந்த ஆழிப்பேரலைகள் கரையோரப் பகுதிகளில் அமைந்திருந்த உல்லாச விடுதிகளையும், கட்டடங்களையும் (14 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரப் பகிர்வுக்கு முஸ்லிம் காங்கிரஸ்

# 19 அம்சங்கள் அடங்கிய திட்டயோசனை

## சில தினங்களில் வெளியாகுமாம்

கொழும்பு,ஜூலை18

சகல சமூகங்களும் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் வகையில் தயாரிக்கப்பட வேண்டியிருக்கும் அரசமைப்பில் சேர்த்துக்கொள்வதற்காக 19 அடிப்படை அம்சங்கள் மற்றும் சிபாரிசுகள் அடங்கிய யோசனைத்திட்டமொன்றை - ஆவணம் ஒன்றை - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் சில தினங்களில் வெளியிடவுள்ளது.

வடக்கு-கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களுக்கான சுயாட்சி ஏற்பாடுகளின் கொள்கை விளக்க விதப்புரைகளும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நேற்று மாலை 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அமைதி முயற்சிகளின் ஸ்தம்பித நிலைமை மற்றும் தற்போதைய அரசியல் நிலைமை ஆகியன குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரிடம் கேட்டோம் அப்போதே (14 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் இளைஞனின் சடலம்

கொழும்பு, ஜூலை 18

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலையடிவேம்பு பகுதியில் பொலிஸார் நேற்றுக்காலை இளைஞர் ஒருவரின் சடலத்தை மீட்டுள்ளனர். அதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் கீதரன் (வயது 19) என்பவரது சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட இளைஞனின் உடலில் இரு துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன என்றும் - இவர் நேற்று முன் (14 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. விநாயகபுரத்தில் கருணா குழு உறுப்பினர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,ஜூலை18

மட்டக்களப்பு மாவட்டத்தில் திருக்கோயில் - விநாயகபுரம் என்ற இடத்தில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் கருணா அணியைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் மூவர் பட்டியடிச்சேனையில் கடத்தல்

ஏறாவூர், ஜூலை 18

வாழைச்சேனை - கல்குடா பட்டியடிச்சேனை கிராமத்தைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்று வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நடராஜா சுரேந்திரன் (22 வயது), சண்முகம் அரியன் (21 வயது), கந்தசாமி மோகன்ராஜ் (22 வயது) ஆகியோரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அருகே கிளைமோர் வெடித்து சிப்பாய் பலி!

### மற்றொரு சிப்பாயும் பொது மக்கள் நால்வரும் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்.நகரில் – வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில் – நேற்று நண்பகல் வேளை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்தார். அப்பகுதியில் பொதுமக்கள் நால்வருக்கும் காயங்கள் ஏற்பட்டன.

வண்ணார்பண்ணை சிவன் பண்ணை வீதியில் கால்நடையாக ரோந்து சென்று கொண்டிருந்த படையினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டே வெடிக்க வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது.



கிளைமோர் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படும் சைக்கிளும் சம்பவத்தை அடுத்து சேதமடைந்த வீடொன்றும்...

கிளைமோர் வெடிப்பை அடுத்து படையினர் அந்தப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த என். ஷகிராஜ் (வயது 23), பி.சங்கிலித்தேவர் (வயது 64) ஆகிய இருவரும் கிளைமோர் வெடிப்பில் சிக்கி காயமடைந்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் புலிகள் பகுதிக்குள் ஊடுருவிய சப் இன்ஸ்பெக்டருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி,ஜூலை18

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியில் ஊடுருவியவேளை தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட சப் இன்ஸ்பெக்டரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி கிளிநொச்சி நீதியாளர் நேற்று உத்தரவிட்டார்.

பிரஸ்தாப சப் இன்ஸ்பெக்டர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். இவர் மீது வழக்குத் தாக்கல் செய்வது குறித்து அவகாசம் தேவை என காவல்துறையினர் கோரியதை அடுத்து இவரை எதிர்வரும் 31 ஆம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை சல்லியில் கிளைமோர் தாக்கு; கடற்படை சிப்பாய் பலி; நால்வர் காயம்!

திருகோணமலை,ஜூலை18

திருகோணமலை நகரில் இருந்து 8 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கரையோரக் கிராமமான சல்லியில் நேற்றுப் பிற்பகல் 3.20 மணிக்கு இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; நால்வர் காயமடைந்தனர்.

வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்து இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதலில் சிக்கி படுகாயம் அடைந்த கடற்படையினர் கடற்படை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேய அமைப்புகள் மீதான தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியன

## கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற இணையம் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை18

மனிதநேய அமைப்புகளை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை.

இவ்வாறு தெரிவித்துள்ளது கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பணிமனை மீது நடத்தப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலைக் கண்டித்து விடுத்த அறிக்கையிலேயே மேற்படி இணையம் இதனைத் தெரிவித்துள்ளது.

இணையத்தின் அறிக்கை வருமாறு:-

கடந்த 15.07.2006 சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் யாழ்ப்பாணம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிமனையில் கைக்குண்டு வீசப்பட்டு பணிமனையின் முன்பகுதி சேதமடைந்துள்ளது. இவ்வாறு மட்டக்களப்பிலும் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக உள்ள மக்களுக்கு அரசாங்கமோ உதவி செய்வதாக இல்லை. கைவிடப்பட்ட நிலையில் உள்ள தமிழர்களுக்கு உதவும் நிறுவனமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இயங்கி வருகிறது. பல்வேறுபட்ட ஐ.நா.நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மனிதநேய அமைப்பாக இயங்கி வருகின்றது.

மனித நேய அமைப்புக்களான பல வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்களை இந்த அரசுடைய காலத்தில் தாக்கப்படுவதும், பணியாளர்கள் கொல்லப்படுவதும், கடத்தப்படுவதும், பணிமனை இடிக்கப்படுவதும் உதவி வழங்கும் நிறுவனங்களின் வாகனம் தாக்கப்படுவதும் தொடர்கதையாகவே உள்ளன. இதையிட்டு இணையம் மிகுந்த கவலை கொண்டுள்ளது.

மனித நேயப் பணிகளில் ஈடுபட்டுவரும் உலக அங்கீகாரம் பெற்று உலகத்திலும் மனித நேயப் பணிகளைத் தொடர்ந்து வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு இவ்வாறான கஷ்ரங்களைக் கொடுப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம், சிங்கள மக்களுக்கும் இந்த அரசு செய்யும் பெரும் துரோகமாகும் என்பதை நாம் சுட்டிக்காட்டுவதுடன் இவ்வாறான நடவடிக்கைகள் சமாதானத்தின் முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு இவை எவ் வகையிலும் உதவாமலேயே போகும்.

ஆகவே, இந்த அரசாங்கத்தினுடைய அராஜக நடவடிக்கைகளை உடன் நிறுத்த அனைத்து வெளிநாட்டு, உள்நாட்டு அமைப்புக்களும் இந்த அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறி இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த முன்வர வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரி நிற்கின்றது- என்று அதில் உள்ளது.

## சஞ்சீவன் நினைவாக இரத்ததானம்

சீருடையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் 6ஆவது ஆண்டு நினைவாக இன்று காலை யாழ்.இந்துக் கல்லூரியில் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் இந்த இரத்ததான நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர் என்று யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## கொழும்புத்துறையில் நேற்று சனநடமாட்டம் இல்லை

கொழும்புத்துறை பிரதேசம் நேற்று மக்கள் நடமாட்டம் இன்றி காணப்பட்டது. இப்பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையே அண்மைக் காலமாக இடம்பெற்றுவந்த கைகலப்பு மற்றும் மோதல் சம்பவங்களினால் மூன்று இளைஞர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தை அடுத்து கொழும்புத்துறை பிரதேசத்தில் நேற்று பூரண அமைதி நிலவியதோடு பிரதேசம் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. (17)

# இலங்கையின் பாதுகாப்பு, இறையாண்மையை உறுதிப்படுத்த சீனா தொடர்ந்தும் உதவுமாம்!

### அந்த நாட்டு அரசு உறுதி அளித்தது என்கிறார் அமைச்சர் மங்கள

கொழும்பு, ஜூலை18

இலங்கையின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு சீனா தொடர்ந்தும் உதவும் என்று சீன அரசு உறுதியளித்திருக்கிறது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுவிட்டு நாடு திரும்பியிருக்கும் அமைச்சர் மங்கள சமரவீர தனது விஜயம், தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே இந்த விடயத்தைக் கூறினார்.

இலங்கையின் அமைதி முயற்சிகள் தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீர சீன அரசுத் தலைவர்களுக்கு விளக்கினார் என்றும் - இந்த சமாதான நடவடிக்கைகளுக்கு தமது நாடு தொடர்ந்தும் உதவும் என்று சீனத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

பயங்கரவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதம் ஆகிய மூன்று தீமைகளை ஒழிக்க இரு தரப்பும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு சீனா ஒப்புதல் தெரிவித்துள்ளதாக மங்கள சமரவீர கூறியுள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் மாற்றங்களை ஏற்படுத்த இருதரப்பும் ஒருங்கிணைந்து செயற்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் தொலைத்தொடர்பு சுற்றுலா மற்றும் ஏற்றுமதி இறக்குமதி அமைச்சர்களை மங்கள சமரவீர சந்தித்து பேச்சு நடத்தினார்.

அவரது சீனப் பயணம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்துள்ளது. (க)

# கண்டியில் மீட்கப்பட்ட கிளைமோர்; சந்தேகநபர்கள் மூவருக்கு பிணை

கண்டி, ஜூலை 18

கண்டியில் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் வீட்டுக்குச் சமீபமாக இரு கிளைமோர் வெடிகுண்டுகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டோரில் மூவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் மொத்தம் 8 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் கமல்ராஜ் சிங்காரவேல், நிரோசன் மற்றும் சச்சான் குமலந்திரன் ஆகியோர் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்குமாறு கண்டி நீதிமன்றம் உத்தரவிட்டது.

வெல்லியஞ்சான், அருளானந்தன், சிங்கராயன், கலிஸ்டர் ஜோசப் மற்றும் சந்தானவேலு ஆகிய இதர சந்தேக நபர்களின் விளக்கமறியல் நேற்றுவரை நீடிக்கப்பட்டிருந்தது. இந்த விடயத்தில் கைதுசெய்யப்பட்ட அனைவரும் மகியங்கனைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## ஆறு சிங்களவர்களுக்கு விளக்கமறியல்

திருகோணமலையின் ட்ரோலர் படகு ஒன்றுடன் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைய முயன்ற சிங்களவர்கள் ஆறு பேரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நாமல் பலல்லே உத்தரவிட்டார்.

கடந்த மாதம் இரண்டாம் திகதி திருகோணமலை அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்த படகொன்றை இழுத்து வருவதற்காக இந்த சிங்களவர்கள் ஆறு பேரும் ட்ரோலர் படகு ஒன்றில் செல்ல முற்பட்டபோது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே நீதிவான் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார். இவர்கள் சென்ற படகின் உரிமையாளரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று குற்றப் புலனாய்வு பொலிஸார் நேற்று மன்றில் அறிவித்தனர். (ஐ)

# தொலைக்காட்சி நாடகங்கள் மீது வரிவிதிக்கும் முடிவைக் கைவிடுக!

## கூட்டு நடவடிக்கைக் குழு அரசிடம் அவசர கோரிக்கை

கொழும்பு,ஜூலை 18

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்களுக்கு பெரும் அளவிலான வரியொன்றை விதிக்க எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை அரசாங்கம் உடனடியாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று தொலைக்காட்சிக் கைத்தொழில் பாதுகாப்புக் கூட்டு நடவடிக்கைக் குழு நேற்று அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

மேற்படி வரி விதிப்பை ஆட்சேபித்து தொலைக்காட்சிக் கைத்தொழில் பாதுகாப்புக் கூட்டு நடவடிக்கைக்குழு நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியது. 'சிரஸ' தொலைக்காட்சியின் பணிப்பாளர் நிலேந்சி [illegible]நசப்பிரிய, எம்.ரி.வி. அலைவரிசைத் தலைவர் செவான் டேனியல், 'சிரஸ' அலைவரிசைப் பணிப்பாளர் சுசாரதினால், ஆர்ட் ரி.வி. முகாமைத்துவப் பணிப்பாளர் சந்திம உடபாகே, ஈ. ரி.வி. பணிப்பாளர் லக்ஷ்மன் பண்டாரநாயக்க ஆகியோர் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்கொண்டனர். இந்த செய்தியாளர் மாநாட்டில் எம்.ரி.வி. அலைவரிசைத் தலைவர் செவான் டேனியல் கூறியதாவது:-

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்களுக்கு பெரும் அளவிலான வரிவிதிப்பை அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளமை தொலைக்காட்சிக் கைத்தொழில் துறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது.

உள்நாட்டுத் திரைப்படத் தொழில் துறையினையும், கலைஞர்களையும் ஊக்குவிப்பதற்காகவே இந்த வரி விதிப்புத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாக அரசாங்கம் கூறுவதை ஏற்கமுடியாது. ஏனெனில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் திரைப்படங்கள், நாடகங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்களுக்கு பின்னணிக் குரல் கொடுத்துவரும் நூற்றுக்கணக்கான கலைஞர்களின் நிலைமை என்ன? அவர்கள் பணக்காரர்கள் அல்லர். இந்தத் தொழிலையே நம்பியிருக்கும் பின்னணிக் கலைஞர்கள் அரசின் இந்த நடவடிக்கையினால் பாதிக்கப்படவுள்ளனர்.

அடுத்ததாக, அரசின் இந்த நடவடிக்கையானது அப்பட்டமான மனித உரிமை மீறலாகவும் கருதப்பட வேண்டியுள்ளது. நாட்டில் தற்போது இருக்கும் சூழ்நிலையில் தொலைக்காட்சி தான் மக்களுக்கு ஆறுதலை தரும் ஒரு கருவியாக இருக்கின்றது. அதிலும் அரசு கை வைக்குமானால் மக்களுக்கு இருக்கும் உரிமைகள், சுதந்திரங்களில் அரசு தலைப்படுவதாகவே கருதவேண்டும்.

இப்படியான நடவடிக்கைகள் மூலம் உள்நாட்டு திரைப்படத்துறையை மேம்படுத்த முடியுமென்று அரசு கருதுமானால் அது பகற்கனவாகவே இருக்கும். மாறாக இதற்கு அரசு வேறு பல நன்மையான நடவடிக்கைகளை எடுக்கலாம். எனவே, தற்போதைய சிக்கலான சூழ்நிலைகளை உணர்ந்து மேற்படி வரிவிதிப்பு தொடர்பான யோசனையினை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு கூறினார் எம் .ரி.வி. அலைவரிசைத் தலைவர் செவான் டேனியல். (ஜ)

# ஆழ்கடல் தாக்குதல் பயிற்சி பெற்ற கடற்புலிகளின் அணி வெளியேறியது

கிளிநொச்சி, ஜூலை 18

கடற்புலிகளின் முதலாவது விசேட துணைப்படையணியான ஆழ்கடல் தாக்குதல் பயிற்சிபெற்ற படையணி பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளது.

நான்கு மாத காலப்பயிற்சியை முடித்து இந்தப் படையணி வீரர்கள் நேற்றுமுன்தினம் வெளியேறியுள்ளது.

கடற்புலி மாவீரர் லெப்.கேணல் ஒஸ்கார் (அதியமான்) பயிற்சிப் பாசறையில் படையணி பயிற்சியை முடித்து வெளியேறும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வின் இறுதியில் பயிற்சியை நிறைவுசெய்த வீரர்கள் மத்தியில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (1)



ஆழ்கடல் தாக்குதல் பயிற்சி பெற்ற படையணியின் பயிற்சி [illegible] தேசியக் கொடி, கடற் புலிகளின் கொடி என்பன ஏற்றிவைக்கப்படுவதையும் ஈகைச்சுடர், லெப்.கேணல் அதியமான் படத்திற்கு மாலை அணிவிப்பதையும் புலிகளின் முக்கிய தளபதிகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# கூட்டுச் சேர்ந்து குழம்பிப்போன தெற்கு இடதுசாரித் தலைவர்

தம்மை இடதுசாரி என்று அடையாளப்படுத்தி வருப வரும் அரசமைப்பு சீர்திருத்தம், இன நல்லிணக்க அமைச் சருமான டி.ஈ.டபிள்யூ. குணசேகர ஆங்கில நாளிதழ் ஒன் றுக்கு அளித்த பேட்டியில் சில விடயங்களைத் தெரிவித் திருக்கின்றார்.

*✱ புலிகள் என்ன நிபந்தனையை – கோரிக்கையை – முன்வைக்கின்றார்கள் என்பதை விட தமிழர்களுக்கு என்ன தேவை என்பது குறித்துத்தான் அரசு கவனிக்க வேண்டும். புலிகளை விட்டுவிட்டு தமிழ்மக்களின் மனதை அரசு வென்றெடுக்க வேண்டும்.*

*✱ தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற கருத்தை நான் ஏற்கமாட்டேன்.*

*✱ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத் திற்கு வெளியில் ஐம்பத்திமூன்று சதவீதமான தமிழர்கள் வாழ்கின்றார்கள். வெளியே வசிக்கும் அறுபத்திமூன்று வீதத் தமிழர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையைத் தான் ஏற்றுள்ளார்கள். பிரபாகரனின் தலைமையை அல்ல.*

- இவை எல்லாம் அமைச்சர் டியூ குணசேகர புதிதாகக் கண்டுபிடித்த பல கண்டுபிடிப்புகள் போலும்.

புலிகள் ஏதோ தங்களின் இயக்கத்துக்காகப் போராடு கின்றவர்கள் போலவும், தமிழர்களின் நிலைப்பாடு, புலி களின் நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்டது போலவும் ஏனைய சிங்களத் தலைவர்களை அடியொற்றி அமைச்சர் டியூ குணசேகரவும் கதைவிடுகின்றார்.

காலங்காலமாகத் தமிழர்களின் நீதியான - நியாயமான - அபிலாஷைகளைப் புறக்கணித்து, தனது சமூகம் பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்கின் அடிப்படையில் தமிழர் களை அடிமைப்படுத்தி, கொடூர ஒடுக்குமுறைக்கு அவர் களை உட்படுத்தியதன் விளைவாகவே தமிழினத்தின் மத்தியிலிருந்து புலிகள் அமைப்பு என்ற விடுதலைப் போராட்ட சக்தி உற்பவிக்க நேர்ந்தது என்பதையும், தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை மக்களையும், புலிகளையும் வேறுபடுத்திப் பார்க்கவே முடியாது என்ற உண்மையையும் புரிந்தும் புரியாததுபோல ஒதுக்கி, தமது பதவி நிலைகருதி புது விளக்கம் கொடுக்க முயல்கின்றார் அமைச்சர் குணசேகர.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் தங்களின் பிரதிநிதிகள் யார் என்பதை உறுதியாகவும், சந்தேகத்துக்கு அப்பாலும் தெளிவுபட எடுத்துரைத்த பின்ன ரும்கூட அரசின் அமைச்சர் ஒருவர் இவ்வாறு பிதற்றுவது அர்த்தமற்றதாகும்.

தமிழர் பிரதேசத்திலிருந்து 'தொத்துப் பொறியில்' எம்.பி யான டக்ளஸ் தேவானந்தாவைத் தவிர, ஏனைய 23 எம்.பிக் களும் விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏகப் பிரதிநிதி கள் என்ற கோஷத்தை மக்கள் முன்நிறுத்தி, அதற்காக வாக் குக்கேட்டு, ஒட்டுமொத்தமாக வென்று, தமிழினத்தின் விருப்பை ஒரே குரலில் வெளிப்படுத்த வைத்தவர்கள் என் பதை அமைச்சர் குணசேகர மறந்துவிட்டுப் பேசுகின்றார். தமிழர் தேசம் உறைப்பாக உணர்த்திய இந்த உண்மையை, இதற்குப் பிறகும் புரியாதவர் போல அமைச்சர் வேறுவித மாக வியாக்கியானம் கூறுவது வெறும் நடிப்பின்றி வேறில்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியில் ஐம்பத்திமூன்று வீதம் பேர் வாழ்கின்றனர் என்ற புள்ளிவிவரத்தைத் தந்து அதனடிப்படையில் புதுக் கணக் குப் போடும் அமைச்சருக்கு ஒரு சரித்திரப் புள்ளிவிவரத்தை மாத்திரம் சுட்டிக்காட்டுவது பொருத்தம் என்று கருதுகிறோம்.

இந்திய உபகண்டம், பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியி லிருந்து விடுபட்ட சமயத்தில் இந்தியாவிலிருந்து மேற்குப் பாகிஸ்தானும், கிழக்குப் பாகிஸ்தானும் (தற்போது பங்களா தேஷ்) ஒரே நாடாக - பாகிஸ்தானாக - பிரிந்தன. அப்போது கிழக்கு, மேற்குப் பாகிஸ்தானில் வசித்த முஸ்லிம்களைவிட, இந்தியாவின் எஞ்சிய பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

பிரிந்துபோகும் பாகிஸ்தானில் வசிக்கும் முஸ்லிம்களை விட எஞ்சிய இந்தியப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் எண் ணிக்கையில் அதிகமாக இருந்தபோதிலும் கூட, இந்திய உப கண்டம் துண்டாடப்படுவதற்கு அந்த எண்ணிக்கை வீதம் ஒரு தடையாகவோ, ஒரு குறுக்கீடாகவோ கணிக்கப்பட வில்லை; கணிக்கப்படமாட்டாது. இனிமேலும் - இங்கும் - அப்படித்தான் அது கவனத்தில் எடுக்கப்படவேண்டும் என் பதை அமைச்சர் டியூ புரிந்துகொள்வாராக!

அடுத்தது - 63 வீத தமிழ் மக்கள் தமது தலைவராக ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவையே தேர்ந்துள்ளனர் என்ற விதண்டாவாதம் பற்றிய விவகாரம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்களம் தனது தலை வனைத் தானே சுயாதீனமாக - தமிழர்களின் தலையீடும், பங்கு பற்றுதலுமின்றி - தேர்ந்தெடுக்கட்டும் என்று கருதி, அந்தத் தேர்தலை தமிழர்கள் பகிஷ்கரித்து, ஒதுங்கியதால்தான் - தள்ளி நின்றதால்தான் - இன்று ஜனாதிபதி ஆசனத்தில் மஹிந்த ராஜபக்ஷவும், அவரது அமைச்சரவையில் அமைச்சர் டியூ குணசேகரவும் அமரும் அளப்பரிய வாய்ப்புக் கிடைத்தது. இந்த யதார்த்தத்தை மறந்து இப்போது பேசுகின்றார் போலும் அமைச்சர் குணசேகர என்று தோன்றுகின்றது.

முழு உலகுக்கும் தெரிந்த இந்த உண்மையை மறந்து விட்டு, வேறு அர்த்தங்கள் - அனர்த்தங்கள் - கற்பித்து அமைச் சர் டியூ குணசேகர பேசுவது அவரது நிலைக்குக் கௌரவம் சேர்ப்பதாக இருக்காது.

இதனால், பேரினவாத ஒடுக்குமுறையின் குரூர நிலை மைகளைப் புரிந்துகொள்ளும் - உணர்ந்துகொள்ளும் - ஓர் உண்மையான இடதுசாரியாக தம்மை வெளிப்படுத்திக்கொள் வதில் அமைச்சர் குணசேகர தவறிவிட்டார்.

ஒரு தேசிய இனத்தின் அடக்குமுறைக்கு எதிரான தேசப் போராட்டத்தை நேசத்தோடு நோக்கவேண்டிய அரசியல் தீர்க்கதரிசனத்தைத் துறந்து, தமிழரின் தேசப்பற்றுணர்வைத் தவறாக எடைபோட்டு, அதை வெறும் இனவாதத் தேசியத்தின் பிற்போக்கு வடிவமாக முலாம் பூசி, அந்தப் போராட்டத்தின் உட்கிடையாக அமைந்துள்ள முற்போக்குப் பண்பியல்பு களையும், புரட்சிகரத் தன்மைகளையும் இனம்காண மறுத்து, பதவிக்காகக் கூட்டுச் சேர்ந்து கொள்கையில் சோரம் போகும் சரா சரி இடதுசாரியாக அவர் தம்மை அடையாளப்படுத்தி நிற்கின் றார்.

இலங்கைத் தீவில் இடதுசாரிகளின் கையறு நிலைக்கான காரணங்களுள் ஒன்றின் வெளிப்பாடாக அவரது கருத்தி னைக் கொள்ளலாம்.

# பலாலி ஆசிரியர் கலாசாலையை கஜீதா கல்லூரிக்கு மாற்ற முடிவு!

அச்சுவேலி,ஜூலை18

பலாலி ஆசிரியர் கலாசாலையை யாழ்.கஜீதா முஸ்லிம் மகளிர் கல்லூரிக் கட்டடத்தில் இயக்குவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலை காரணமாக இந்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலியில் இயங்கமுடி யாமல் போனது. அதன்பின்னர் வெவ் வேறு இடங்களில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இயங்கியது. தற் போது திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையின் ஒரு பகுதியில் அது தற்காலிகமாக இயங்கி வருகிறது. வித்தியாசாலை மாணவர்களின் வசதி கருதி கலாசாலையை அங்கிருந்து வேறி டத்துக்கு மாற்றுமாறு வற்புறுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை யாழ். முஸ் லிம் தெருப் பகுதியில் உள்ள கஜீதா முஸ் லிம் மகளிர் கல்லூரிக் கட்டடத்துக்கு இடம்மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இங்கு தற்காலிகமாக ஆசிரியர் கலா சாலையை செயற்படுவதற்கான அனு மதியை கல்வி அமைச்சின் ஆசிரிய கலாசாலைப் பிரிவும் வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களமும் வழங்கியுள்ளன.

சேதமடைந்த நிலையில் இயங்காது இருக்கும் கஜீதா முஸ்லிம் மகளிர் கல்லூரி வளாகத்தில் திருத்தவேலை களும் சுத்திகரிப்புப் பணியும் கணிச மான அளவு செய்ய வேண்டி உள்ளன. இந்த வருட பிற்பகுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் ஆசிரிய கலாசாலையின் செயற்பாடுகள் கஜீதா மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும் என ஆசிரிய கலாசாலையின் அதிபர் த.காங் கேசபிள்ளை தெரிவித்தார்.

சேதமடைந்த நிலையில் காணப் படும் பாடசாலைக் கட்டடத்தைத் தேவை யான் அளவு திருத்தி அமைப்பதற்கு அவசரமாகத் தேவைப்படும் நிதி உதவி களைப் பெறுவதற்கு யாழ். அரச அதி பருடன் தொடர்புகொண்டிருப்பதாக வும் அவர் தெரிவித்தார். (11)

# தமிழ்பாட நூல் வெளியீட்டின் எதிர்காலம் குறித்துக் கவலை

அச்சுவேலி,ஜூலை18

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ்மொழிப் பிரிவின் எதிர்காலம் குறித்து தமிழ் கல்வியியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்திணைக்களம் ஊடாக கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட தமிழ் மொழி மூலப்பாடநூல்களில் மொழி இலக்கணப் பிழைகள் அதிகளவில் காணப்பட் டன. இதனால் தமிழ் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் சிரமங்களை எதிர் கொண்டனர்.

இந்த நிலையில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ்மொழிப் பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியின் தமிழ்மொழித் தேர்ச்சி குறித்து கல்வி வட்டாரங்களில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அதிகாரிக்கு தமிழ்மொழியில் போதிய தேர்ச்சி இல்லை என் றும் -

இந்நிலையில் தமிழ் பாடநூல் வெளியீட்டின் எதிர்காலம் கேள்விக் குறியாகி யுள்ளதாகவும் கல்வி வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

# சுனாமி வீட்டுத் திட்டப் பணிகள் தாமதம்; பொறுப்பெடுத்தோருக்குக் காலக்கெடு

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலை யால் பாதிக்கப்பட்டோருக்கான வீட் டுத் திட்டங்களைப் பொறுப்பெடுத்த அரசசார்பற்ற நிறுவனங்கள் பணியில் மெத்தனம் காட்டி வருகின்றன. அத் தகைய நிறுவனங்களுக்கு பணியைப் பூர்த்திசெய்ய மூன்று வாரங்கள் காலக் கெடு விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர்(சுனாமி) பா.செந்தில்நந் தனன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலை யால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் பகுதியாகச் சேதமடைந்த வீடுகளைப் புனரமைத்துக் கொடுக்கவும் பல தொண்டு நிறுவனங்கள் முன்வந்திருந் தன. ஆயினும் பொறுப்பெடுத்த நிறுவ னங்கள் பலவும் வீட்டுத்திட்டங்களை ஒன்றரை வருடம் கழிந்த நிலையிலும் ஐம்பதுசதவீதம் கூட நிறைவேற்ற வில்லை.

இவ்விடயம் குறித்து கேட்டபோது மேலதிக அரச அதிபர் தெரிவித்தா வது:-

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலை யால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைக்கும் பணிகளைப் பல தொண்டு நிறுவனங்கள் பொறுப்பெடுத்தன. ஆயினும் இடைநடுவில் சில நிறு வனங்கள் பணியிலிருந்து விலகிவிட் டன. அவ்வாறு விடுபட்ட 4 ஆயிரத்து 272 வீடுகளைக் கட்டும் பணி உலக வங்கியின் வீட்டுத்திட்டத்திற்குள் உள் வாங்கப்பட்டது.

அவ்வீடுகளில் பகுதி சேதமடைந்த 2ஆயிரத்து 225 வீடுகளில் 95 வீத மான வீடுகளின் புனரமைப்புப் பணி முடிக்கப்பட்டு விட்டது. முழுமையாச் சேதமடைந்தவற்றில் 32 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஏனையவை எதிர் வரும் டிசெம்பர் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்.

சில நிறுவனங்கள் பொறுப்பெடுத்த வீடுகளின் கட்டுமானப் பணிகள் தாமத மடைந்துள்ளன.

இந்நிறுவனங்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்தியும் வீட்டுத்திட்டங்கள் இது வரை துரிதப்படுத்தப்படவில்லை.

இவ்விடயம் குறித்து ஜனாதிபதி செயலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

அடுத்து வரும் 3 கிழமைகள் அந் நிறுவனங்களுக்கு காலக்கெடு கொடுப் பது எனவும் -

அந்நிறுவனங்கள் உரிய நட வடிக்கை மேற்கொள்ளாவிட்டால் நிறு வனங்களின் பொறுப்பிலிருந்து அவ்வீட் டுத் திட்டத்தை மீளப்பெற்று அவற் றைப் பயனாளிகளின் பங்களிப்புட னான வீட்டுத்திட்டமாக மாற்றிமைப் பது எனவும் - ஜனாதிபதி செயலகம் அறி வித்துள்ளது - என்றார் அவர். (202-ரி)



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆடிப்பிறப்புத் தீர்த்தோற்சவம் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. (படம் : நேசன்)

# மாணவனைக் காணவில்லை என முறைப்பாடு

வலி.வடக்கு, ஜூலை18

தனியார் கல்வி நிலையத்திற்கு செல்வதாக கூறிச் சென்ற அரியாலை, கண்டி வீதியைச் சேர்ந்த 18 வயது மாணவன் வீடு திரும்பவில்லை என மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவனான சிவலிங்கம் வரதராஜ் என்பவரே காணா மல் போயுள்ளார் என்று அவரது தயார் முறையிட்டுள்ளார். (68)

## நாளை

ஆடி - 03
புதன்கிழமை
19.07.2006
திதி : நவமி
பிற்பகல்: 01.50
நட்சத்திரம் : பரணி
பின்னிரவு : 12.45
சுபநேரம் : 04.31 - 06.01
ராகுகாலம் : 12.01 - 01.31

# கிராம அலுவலர் சம்பள முரண்பாடு தீர்க்க அரசுக்குப் பரிந்துரை

யாழ்ப்பாணம்,ஜூலை18

கிராம உத்தியோகத்தர்களுக்கு ஏற் பட்ட சம்பள முரண்பாட்டைத் தீர்க்கு மாறு சம்பள மீளாய்வுக் குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது என வடக்கு - கிழக்கு மாகாண கிராம உத்தியோகத் தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் வெளியிட் டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது-

கிராம உத்தியோகத்தர்களுக்கு ஏற் பட்ட சம்பள முரண்பாட்டைத் தீர்ப்ப தற்கு சம்பள மீளாய்வுக் குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

இதனையடுத்து கடந்த ஜனவரி முதலாம் திகதியிலிருந்து படி நிலை ஒன்றிலிருந்து படி நிலை இரண்டுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி உள்நாட்டலுவல் கள் அமைச்சில் நடைபெற்ற தேசிய கிராம உத்தியோகத்தர் தொழில் சங்கங் களுக்கான கலந்துரையாடலில் அமைச் சின் பதில் செயலாளர் இதனைத் தெரி வித்தார்.

இக்கலந்துரையாடலில் புதிய கிராம உத்தியோகத்தர்களின் புதிய நிய மனம், பதவி உயர்வு, கிராம உத்தி யோகத்தர்களின் சட்டரீதியான கட மைகள், கிராம உத்தயோகத்தர் பிரி வின் கட்டமைப்பு, இரண்டாம் மொழி யில் சித்தியடைந்த வர்களுக்கான ஊக் குவிப்புப்படி, கிராம உத்தியோகத்தர் களுக்கு நவீன முறையில் பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு விடயங் கள் கலந்துரையாடப்பட்டன - என்றுள் ளது.

## உதயவாக்கு

**என்னதான் புத்திசாலியானாலும் நாளையின் கதியை உங்களால் சொல்லவோ ஊகிக்கவோ முடியாது. இன்றைய பொழுதை வீணாக கழிக் காதீர்கள் அது மீண்டும் வராது.**
*- உமர் கையாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறொயிலர் குஞ்சுகள் 19.07.2006 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - பருத்தித்துறை, P.ரவி - சாவகச்சேரி, றாஜீவ் கால்நடைத்தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு, நாகம்ஸ் பாம்- வட்டுக்கோட்டை, மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சுன்னாகம், கோண்டாவில், கோப்பாய் ஆகிய கால்நடைச் சங்கக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். T.P.: 222- 3529, 222 2867 (52000)

## தவறிவிட்டது

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நகுலேஸ்வரி தியாகராசா என்பவரது அ.அட்டை கைப்பேசுடன் முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. (08.07.2006) கண்டெடுத்தவர்கள் 61, கில்னர் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். 077 3236027, 021 222 9355 (52313)

## வீடு வாடகைக்கு

இல.204/5, நாவலர் வீதியில் வீடு வாடகைக்குண்டு. முற்பணத்துடன் வாடகை நேரில் தீர்மானிக்கலாம் தொடர்புகளுக்கு: T.P.: 3393 (52330)

## ஒத்துமாறல்

கொழும்பு மாவட்ட தேசிய பாடசாலையில் இருந்து யாழ்,வவுனியா, திருகோணமலை மாவட்டத்திற்கு இரசாயனவியல் ஆசிரியர் (B.Sc.) ஒத்துமாற விரும்புகிறார்.

*தொடர்பு:* **பராபரன்,**
**077 6038913** (52326)

## எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை18

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான எயிட்ஸ் நோய்த்தடுப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கடந்த 13ஆம், 14ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றன.

குடாநாட்டின் பின்தங்கிய பகுதிப் பாடசாலைகளின் மாணவர்களுக்கே விழிப்புணர்வுச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

இதேவகையிலான கருத்தரங்குகள் பல மட்டங்களிலும் தொடர்ந்து நடத்தப்படும் என அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் தெரிவித்தனர். (204-ரி)

## அதிபர் சேவை ஆள்சேர்ப்பு பரீட்சை

நாடளாவிய ரீதியில் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்காதவர்கள் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204-185)

## தென்மராட்சியில் வாக்காளரை பதியும் பணி

தென்மராட்சி பிரதேசத்தில் வாக்காளர் பதிவுப் பணி அந்தந்தக் கிராம அலுவலர் பணிமனைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

18 வயதுக்கு மேற்பட்டவர்களில் இதுவரை வாக்காளராக எங்குமே பதிவு செய்யாதவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் உரிய படிவத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (117)

# மரண அறிவித்தல்கள்

## செல்வத்துரை குமரேஸ்வரன்



யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்வத்துரை குமரேஸ்வரன் 16.07.2006 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் அச்சுவேலியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - காலஞ்சென்ற இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீரதி (ராதா) அவர்களின் அன்புக் கணவரும் ஜெயபாலன், ஜெயராணி, இந்திராணி, பரமேஸ்வரன், புஷ்பராணி, தவராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரா, ஏகாம்பரம், நரேந்திரன், ஹேமா, தயாபரன், ரவீந்திரன், செல்வரதி, பகீரதி, ஐங்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏகாம்பரம் ஜெயராணி,*
*No.2, புறாடி லேன்,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (52336) (32-17-15)

**பகீரதி கருணாநந்தன்,**
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

## கந்தையா பாலசுப்பிரமணியம் (இராசசூரியர்)

சங்கரத்தை, குளத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்காலிகமாக கொழும்பில் வசித்தவருமாகிய கந்தையா பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி) அவர்கள் நேற்று (17.07.2006) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - நல்லபிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தெய்வநாயகி (கிச்சி) மற்றும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற விசுவலிங்கம், செல்லம்மா (ஆஸ்திரேலியா), கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சர்வேஸ்வரன் (ஆஸ்திரேலியா), பாலேஸ்வரன் (ஆஸ்திரேலியா), நகுலேஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வேல்விழி (ஆஸ்திரேலியா), ரேணுகா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும் கஜன், திவ்யா, தரண்யா, சரண்யா ஆகியோரின் ஆசைப் பேரனும் ரட்ணவேல் - வான்மதி (ஆஸ்திரேலியா) தம்பதிகளின் மாமனும் பரமானந்தம் (கொழும்பு), நாகேந்திரம், சிவஞானம், கனகேஸ்வரி, புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2006) செவ்வாய்க்கிழமை அன்னாரின் சங்கரத்தை இல்லத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*குளத்தடி,*
*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.* (52339) (32-15-17)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், உறவினர்.**


## உங்கள் வாழ்வுக்கு பிரகாசமான எதிர்காலம்

*எங்கள் காப்புறுதி நிழலில்*
*எங்களுடன் நீங்களும் ஒருவராய்*
*இணைந்துகொள்ளுங்கள்.*

**காப்புறுதி ஆலோசகர் பதவி வெற்றிடங்கள் - (JAF)**

**முடிவில்லாத வருமானத்தோடு, சமூகத்துக்கும் சேவை செய்து; உங்கள் வியாபாரத்தையும் முன்னேற்றிக்கொள்ள கனவு கண்டீர்களா?**

**தகைமைகள்:**
- க.பொ.த. (சாதாரணம்) இல் தமிழ் / சிங்களம், ஆங்கில பாடத்துடன் கணித பாடம் அடங்கலாக ஆறு பாடத்தில் சித்தி.
- தனக்கேயுள்ள விசேட திறமையால் நிறுவனத்தின் வியாபார நடவடிக்கையை அபிவிருத்தி செய்தல்.

**பயிற்சிகள்:**
- தொழில்சார் பயிற்சிகளும் கையேடுகளும் வழங்கப்படுவதுடன் எமது நிறு.வனத்தினால் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகளூடாக மேலதிக பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- 2002 இல.43 காப்புறுதித்துறையை அபிவிருத்தி செய்யும் சட்டத்துக்கு அமைய நடத்தப்படும் பரீட்சைகள் எடுப்பதற்கான ஆலோசனைகளும் பயிற்சிகளும் வழங்கப்படும்.

**கடமைகள்:**
- எமது யாழ். பிராந்திய அபிவிருத்தி நிலையத்தின் கீழ் காப்புறுதி தேவைப்படுவோருக்கு அவர்களுடைய நிதித் தேவைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு தனி நபருக்கும் சிறந்த ஆயுள் காப்புறுதியை வழங்கல்.
- மக்களின் சொத்துகளுக்கான காப்புறுதியை வழங்கல், (வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் கூட்டுக் காப்புறுதி)
- சிறந்த நம்பிக்கைக்குரிய சேவையை மக்களுக்கு வழங்கி நிறுவனத்துக்கும் மக்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தல்.

**நன்மைகள்:**
- நீங்கள் சேகரிக்கும் கட்டுப்பணத்தில் தரகு அடிப்படையில் உங்கள் வருமானம் அமையும்.
- ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்.
- உங்களுக்கான சுய தொழில் ஒன்றை வளர்த்தல்.
- சரியான காப்புறுதிச் சேவையை வழங்கி சமூகத்துக்கு சேவை செய்யும் அந்தஸ்து.
- உங்கள் திறமைக்கு ஏற்ப நீங்கள் வியாபார அபிவிருத்தி அலுவலகராக வாய்ப்பு.

***உங்கள் விண்ணப்பங்களை, பூரண சுய விவரக்கோவையுடன் இணைத்து 7 நாள்களுக்குள் கீழ்க்காணும் விலாசத்துக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும். [விண்ணப்பிக்கும்போது இடப் பக்க மேல் கடித உறையில் பதவி தொடர்பான விவரத்தைக் குறிப்பிடவும்]***

**Manager,**
**HNB Assurance,**
**62,64, Stanly Road, Jaffna.**
**T.P.: 021 222 6016, Fax: 021 4591971**

**HNB ASSURANCE**

(52332) (24-32-17-15)


# 16ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **கதிரவேலு குமாரசாமி**

தோற்றம் 05.10.1932 — மறைவு 03.07.2006

**தாத்தா என்றழைக்க இனி யாருமில்லை எமக்கு**
**பாசத்தின் உறைவிடமாய், குடும்ப ஒளிவிளக்காய்**
**மிளிர்ந்த எம் தாத்தாவே!**
**உங்கள் நினைவுகள் எம்மை விட்டு**
**என்றும் அகலா.**

கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.
(52344)(21-32-15-17)

உங்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்கும்:
**பேரப்பிள்ளைகள்.**

## தமிழீழ மாவட்ட நீதிமன்று, யாழ்ப்பாணம் - பளை

**வழ. இல. *108/05***
**தன்மை : *சீட்டு***

**வழக்காளி:**
***01.* திருமதி ஆ. தயாளினி**
**மணல் வீதி,**
**தம்பசிட்டி, புலோலி மேற்கு,**
**பருத்தித்துறை.**

**எதிராளி:**
***01.* திரு. தங்கவேலாயுதம் அன்பழகன்**
**வரதம்மாள் புடைவையகம்,**
**பஸ் நிலையம், பருத்தித்துறை.**

### பகிரங்க அறிவித்தல்

**மேற்படி வழக்கானது வழக்காளியால் எதிராளிக்கெதிராக சீட்டுப் பணப்பிணக்கு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டு எதிராளிக்கு உரிய முறையில் அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டும் எதிராளி எதுவித முன்னறிவித்தலுமின்றி மன்றுக்கு சமுகமளிக்காமையால் மன்று குறித்த வழக்கை ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக்கொண்டதன் அடிப்படையில் வழக்காளியை ஒருமுகமாக விளங்கி இடைக்காலத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன் இடைக்கால தீர்வையும் உரியமுறையில் எதிராளிக்கு சேர்ப்பிக்கப்பட்டும் எதிராளி அது தொடர்பாக தனது ஆட்சேபனையை உரிய காலத்தில் மன்றில் தோன்றித் தெரிவிக்காமையால் குறித்த இடைக்காலத் தீர்வை முற்றாக தீர்வையாக்கப்பட்டதன் அடிப்படையில் வழக்காளிக்கு எதிராளி செலுத்தவேண்டிய சீட்டுப் பணத்திற்காக நகராட்சி மன்றின் (பருத்தித்துறை) குத்தகை ஆதனத்தில் அமைந்த எதிராளியின் கடைக்கட்டடமான வரதம்மாள் புடைவையகம் நீதிமன்றினால் நடுக்கட்டி பகிரங்க ஏலத்தில் விற்கப்பட உள்ளதால் அது தொடர்பான ஆட்சேபனை எதுவும் இருப்பின் எதிராளியோ அல்லது அவரைச் சார்ந்தவர்களோ இவ் அறிவித்தல் கிடைத்து 14 நாள்களுக்குள் நீதிமன்றில் தோன்றித் தெரிவிக்கவும். தவறும் பட்சத்தில் நீதிமன்றினால் குறித்த கடை நடுக்கட்டி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் தெரிவிக்கப்படுகிறது.**

"மன்றின் கட்டளைப்படி"

வரைவு: வி.கலா,
சட்டவாளர்.
(சி/50263) (18-32-17-15)

செ.பிறேமலதா,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
பளை (யாழ்ப்பாணம்).

# மரண அறிவித்தல்



## திருமதி பொன்னம்பலம் அமிர்தரட்ணம்

ஏழாலை மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அமிர்தரட்ணம் 15.07.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு தம்பதியினரின் தவப்புதல்வியும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் நல்லம்மா, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, பரிமளம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகராணி, காலஞ்சென்ற கோகுலதாசனின் அன்புத் தாயும் கனகரத்தினத்தின் மாமியும் சிவபாலன் (ஹட்டன்), செல்வநாயகி (ஹட்டன்) ஆகியோரின் சிறியதாயும் ரஜனி - ஜெயா (சுவிஸ்), ரஞ்சனி - பாலா (லண்டன்), பிருந்தா - ரஜீ (சுவிஸ்), வினோ - மோகன் (சுவிஸ்), ஜெகந்தன் - சுபா (சுவிஸ்), சியா - சுரேஸ் (சுவிஸ்), தயா - ஜெயராஜ் (அமெரிக்கா), சயந்தினி (நீர்கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜெனிபன், ஜெனுாஸ், ஜெசித், சியாந்தன், வீணா, விதுன், நேகா, சமீர் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (19.07.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, நீர்கொழும்பு பொதுமயானத்தில் (இந்து) தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**மகள், பேரப்பிள்ளைகள்.**
248/23, கடற்கரைத் தெரு,
நீர்கொழும்பு.
T.P.: 031- 4870830

(52333) (32-15-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மாதகல் புனித தோமையார் முன்பள்ளியில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் நிறுவப்பட்ட சிறுவர் பூங்காவின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.**

**மாதகல் பங்குத்தந்தை அருட்திரு. ஏ.சி. கிறிஸ்தோப்பர் அடிகளார் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து பூங்காவை திறந்துவைப்பதை படத்தில் காணலாம்.**

*(படம் : வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

# குடாநாட்டு வீதிகளை அகலமாக்கும் திட்டம்; அசாதாரண சூழ்நிலையால் தடைப்படும் நிலை!

## நிதி தெற்கிற்குத் திரும்புமென அதிகாரி கவலை

யாழ்ப்பாணம்,ஜூலை18

குடாநாட்டின் வீதிகளை அகலமாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தற்போதைய அமைதியற்ற சூழ்நிலை பெரும் தடையாக அமைந்துள்ளது. இதற்காகப் பயன்படுத்தப்படவிருந்த நிதி மூலங்கள் தென்பகுதி அபிவிருத்திகளுக்காகச் சென்றடைந்துவிடலாம் என யாழ். வீதியமைப்பு அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் சிவனேசராசா கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டில் வீதிகளை அகலமாக்கும் திட்டத்தின்கீழ் யாழ். - கண்டி வீதி, யாழ். - பருத்தித்துறை வீதி, யாழ். - பலாலி வீதி, யாழ். - காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் - காரைநகர் வீதி ஆகிய பிரதான வீதிகள் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் 30 அடிகள் வரை அகலமாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

அதற்கமைய மக்கள் குடியிருப்புகள் குறைந்த வல்லையிலிருந்து புறாப்பொறுக்கி வரையான வீதியை அகலமாக்குவதற்கு முதற்கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் குடியிருப்புகள் நெருக்கமாகவுள்ள நகரப் பகுதி வீதிகள் மக்கள் பங்களிப்புடன் - அவர்களின் ஒத்துழைப்புடன் அகலமாக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கான முதற்கட்ட செயற்பாடாக அவ்வப்பகுதி கிராம சேவகர்களூடாக விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஆனால், தற்போதைய அசாதாரண சூழ்நிலையால் வீதி அபிவிருத்தித் திட்டம் அனைத்தும் உறங்குநிலையில் இருக்கின்றன.

இதனால் இத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி தென்பகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (204-ரி)

## கால்நடைகள் நீரின்றி அவதி

தென்மராட்சி,ஜூலை18

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள குளங்கள் வற்றி நீரின்றிக் காணப்படுவதால் மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகள் நீருக்காக அலைந்து திரிகின்றன.

இப்பிரதேசத்தில் நீண்ட நாள்களாக மழை பெய்யாததால் குளங்களில் நீர் வற்றி வரண்டுபோய்க் காணப்படுகின்றன. (117)

## கற்கோவளம் நூல் நிலையத்தின் கட்டுமானப் பணி இறுதிக் கட்டத்தில்

தென்மராட்சி,ஜூலை18

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் கே.டி.எம்.ஜி நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டப் பகுதியில் ஹற்றன் நஷனல் வங்கியினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் நூல் நிலையக் கட்டுமானப் பணி பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

இந்த நூல் நிலையத்திற்கான தளபாடங்கள் வந்துசேர்ந்ததும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நூலகம் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நூலகத் திறப்பு விழா தினத்தன்று அப்பகுதியைச் சேர்ந்த 30 சிறார்களுக்கு சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்க வங்கி நிர்வாகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

(117)

## மாவிட்டபுரம் ஆலயத்தில் வியாழன் ஆடித் திருக்கார்த்திகை உற்சவம்

வலி.வடக்கு,ஜூலை18

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆடித் திருக்கார்த்திகை திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிக்கு பூர்த்தியடையவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 'காளிதாசரது குமார சம்பவம்' என்ற தலைப்பிலான சொற்பொழிவும் -

முற்பகல் 11 மணிக்கு இணுவில் மகாதேவ சிவாச்சார்ய சோமசுந்தர சர்மா குழுவினரின் வாத்திய இசை நிகழ்வும் -

நண்பகல் 12 மணிக்கு திருப்புகழ் அஞ்சலியோடு சண்முகார்ச்சனையும் அதனைத் தொடர்ந்து கந்தசுவாமிப் பெருமான் திருவீதியுலாவும் இடம்பெற்று மதியம் அன்னதானமும் நடைபெறும்.

ஆலயத் தேர்த் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகும். முற்பகல் 10.15 மணிக்கு முருகப் பெருமான் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவார். (86)



**வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் அலுவலர்களுக்கான பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்றது.**

**நிகழ்வில் நிர்வாக கிராம அலுவலர் ஆர்.சபாநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் இடமாற்றம் பெற்றுச்செல்லும் அலுவலர்களான எஸ்.பிரவணபவா, செல்வி என்.சண்முகம், திருமதி எஸ்.திருமகள் ஆகியோருடன் ஓய்வுபெற்ற கிராம அலுவலர் எம்.பாலசிங்கமும் நிற்பதைப் படத்தில் காணலாம்.**

*(படம்: வலி.மேற்கு செய்தியாளர்)*

## மிதிவெடி அகற்றிய பிரதேசம் மக்கள் குடியமரக் கையளிப்பு

நல்லூர்,ஜூலை18

யாழ்.மாவட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளில் 50 சதவீதமானவை அகற்றப்பட்டு மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என யாழ். செயலக மிதிவெடி அகற்றும் பிரிவு தெரிவித்துள்ளது.

134 பிரதேசங்களில் கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளதுடன் 20 இற்கும் அதிகமான பிரதேசங்களில் துப்புரவு வேலைகள் செய்யப்பட்டு மிதிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம், இராணுவ பொறியியல் பிரிவு என்பன இணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

பருத்தித்துறை முதல் தொண்டைமானாறு வரையான கரையோரப் பகுதிகளில் சுமார் 1500 சதுரமீற்றர் நிலப்பரப்பில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளனர். இந்தப் பகுதிகளில் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கென 500 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டது.

(204-111)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடும் பாதிப்புற்றோருக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடும் பாதிப்புற்றோர் நிவாரணம் பெற தெரிவு செய்யப்பட்டு இதுவரை தொடர்புகொள்ளாதவர்களை பிர்தேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் எ.அன்ரன் யோகநாயகம் கேட்டுள்ளார்.

ஊனமுற்றவர்களுக்கான நிவாரணம் மற்றும் உயிரிழந்தவர்களுக்கான நிவாரணம் பெறத் தெரிவுசெய்யப்பட்டு இதுவரை பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளாத விண்ணப்பதாரிகளின் பெயர் விவரம் கிராம சேவையாளர் பிரிவு என்பன வருமாறு -

**ஊனமுற்றோர் நிவாரணம்**

மு.கருணைதாஸ்(ஜே/135 நவாலி கிழக்கு), ட.யோ.டன்ஸ்ரி(ஜே/144 மாகியப்பிட்டி), இ.யோகராசா(ஜே/132 உயரப்புலம்), மு.பொன்னுத்துரை(ஜே/138 மானிப்பாய் கிழக்கு), நா.சின்னப்பு (ஜே/134 நவாலி வடக்கு), சி.சண்முகலிங்கம்(ஜே/143 சண்டிலிப்பாய் மேற்கு), வே.பற்பதலிங்கம் (ஜே/150 மாதகல் கிழக்கு)

**இறந்தவர் நிவாரணம்**

ப.மரியம்மா(ஜே/146 பண்டத்தரிப்பு), அ.மிக்கேல்(ஜே/132 உயரப்புலம்), ம.அன்னமேரி(ஜே/133 ஆனைக்கோட்டை), பொ.இன்னாசியார்(ஜே/153 பெரியவிளான்) சு.கொன்சி(ஜே/151 மாதகல் தெற்கு), கு.நல்லம்மா(ஜே/145 வடலியடைப்பு), ச.பூபதி(ஜே/134 நவாலி வடக்கு), வி.கிருஷ்ணராணி(ஜே/140 மானிப்பாய் மேற்கு), சோ.வள்ளியம்மை(ஜே/152 மாதகல் மேற்கு)(204)

## சுற்றுமதில் உள்ள இடத்திலேயே கழிவுகளைக் கொட்டவேண்டும்!

### உள்ளூராட்சிகளுக்கு அரசஅதிபர் அறிவுறுத்து

உள்ளூராட்சி சபைகளினால் சேகரிக்கப்படும் கழிவுகள் சுற்றுமதில் அமைக்கப்பட்ட இடத்திலேயே கொட்டப்படவேண்டும்.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவுறுத்தியுள்ளார்.

'டிலெக்' திட்டம் தொடர்பான கூட்டத்தில் அவர் கூறியுள்ளதாவது-

குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் குப்பை, கூழங்கள் மற்றும் கழிவுகளைக் கொட்டும் பொருத்தமான இடங்களில் சுற்றுமதில் அமைக்கவேண்டும். அத்துடன் இறுதிக் கழிவகற்றும் இடங்களுக்கு விளம்பரப் பலகையிடல் வேண்டும்.

குப்பைகள் கொட்டுவதற்கு பொருத்தமான இடம் இல்லாத பிரதேச சபைகள் அல்லது நகர சபைகள் அவ்வப்பகுதி பிரதேச செயலர் அல்லது உதவி அரச அதிபர்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் இதுவரை கட்டாக்காலி நாய் அழிப்பிற்கு நீர்த்தொட்டி அமைக்காத உள்ளூராட்சி சபைகள் தொட்டி அமைத்து அதற்கான முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் வளர்ப்பு நாய்களுக்கு அதற்கான வளர்ப்புநாய் அட்டை வழங்கி ஊசிபோடுவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் இவ்வாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (185)

## கச்சாய் பகுதிக்கு மின் விநியோகம்

தென்மராட்சி,ஜூலை18

தென்மராட்சி கச்சாய் பகுதிக்கான மின் விநியோக அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கச்சாய் கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜூம் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன்,மின்சார சபையின் சாவகச்சேரி மின் அத்தியட்சகர் எஸ்.சடாட்சரமூர்த்தி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (117)

## கிராம அலுவலர் விளக்கம்

ஊர்காவற்றுறை, சுருவிலில் திருடப்பட்ட கோயில் பணம் தொடர்பாக ஒன்றுக்கும் மேற்பட்டோர் மீது சந்தேகம் எழுந்துள்ளதாகவும்-

திருட்டுப்போன பணத்தை வீட்டு முற்றத்தில் கண்டெடுத்துக் கொடுத்தவர் குறிப்பிட்ட வீட்டில் வாடகைக்கு குடியிருப்பவரே தவிர சந்தேக நபர்கள் எவரினதும் மனைவி அல்லர் என்றும் -

பணத்தை மீட்க நடவடிக்கை மேற்கொண்டவரான அப்பகுதி முன்னாள் கிராம அலுவலர் மு.விஜயரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி உதயனில் திருட்டுப்போன கோயில் பணம் அச்சத்தால் மீட்பு என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்தே கிராம அலுவலர்இந்த விளக்கத்தைத் தெரிவித்துள்ளார்.

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying

யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளொட்டின் உள்வீட்டுச் சதியே பவான் படுகொலைக்குக் காரணம்!

## தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான புளொட் உறுப்பினர்கள் அறிக்கை

புளொட் அமைப்புக்குள் ஏற்பட்ட உள்வீட்டு சதி நடவடிக்கையாலேயே அந்த அமைப்பின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர்


பவான்

களில் ஒருவரான பவான் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார் என தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான புளொட் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

'உள்ளிருந்து ஒரு கடிதம்' என்று தலைப்பிட்டு தமிழ்த்தேசியத்திற்கு ஆதரவான புளொட் உறுப்பினர்கள் அனுப்பியுள்ள பத்திரிகைச் செய்தியிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


அன்புள்ள புளொட் ஆதரவாளர்களே வணக்கம்!

வவுனியா மாவட்டத்திலுள்ள புளொட் உறுப்பினர்கள் இலங்கை இராணுவப் புலனாய்வின் கைக்கூலிகளாகச் செயற்படுவதைத் தடுத்து வந்த தமிழ்த் தேசிய உணர்வுடைய பவான் (இரத்தினம் சிறிஸ்கந்தராஜா) கடத்திக் கொல்லப்பட்டுள்ளார். இவர் ஆரம்பம் முதலே வவுனியா மாவட்டத்தில் புளொட்டின் படுகொலைகளை எதிர்த்து உள்ளிருந்து குரல்கொடுத்துவந்தவர். மாணிக்கதாசனாலும், அலவாங்கு தாசனாலும் வவுனியா மாவட்டத்தில் எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் பிடித்துக்கொல்லப்பட்டவேளையில் அதற்கு எதிராகக் குரல்கொடுத்தமையினாலும், தடுக்க முற்பட்டமையினாலும் மாணிக்கதாசனால் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தவர். அவரைக் கைதுசெய்து சுமார் ஒரு மாதமளவில் விசாரிக்கப்பட்டு புளொட் உறுப்பினரின் படுகொலைகளுக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிடக்கூடாது என மிரட்டி விடுவிக்கப்பட்டிருந்தார்.

**பவானின் பங்கு குறிப்பிடத்தக்கது**

மாணிக்கதாசன், அலவாங்கு தாசன் போன்றோர் கொல்லப்பட்டு வவுனியா மாவட்டத்தில் புளொட்டின் அத்துமீறல்கள் ஓரளவுக்கேனும் மட்டுப்படுத்தப்பட்டதில் பவானின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்தும் புளொட் அமைப்பினரைத் தமிழ் தேசியத்திற்கு எதிராகவும், பொது மக்களுக்கு எதிராகவும் செயற்பட வைப்பதில் இலங்கை அரச புலனாய்வினரும், புளொட் தலைமையினரும் அழுத்தம் கொடுத்து வந்த போதிலும் அதனை ஏற்க மறுத்து தமிழ் உணர்வுடன் செயற்பட்டவர். தமிழ் இளைஞர்களின் படுகொலைகளை எதிர்த்து மாணிக்கதாசனின் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்துவதிலும் பவானுடன் இணைந்து செயற்பட்ட புளொட்டின் அப்போதைய நிதிப்பொறுப்பாளர் வித்தி (கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்) 2000 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வவுனியாவில் புளொட் தலைமையின் ஆசீர்வாதத்துடன் கைதுசெய்யப்பட்டு இராணுவப் புலனாய்வினரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் காணாமல்போயிருந்தார். வித்தியின் நிலைமையைத் தெரிவிக்கும்படி பவான் பல தடவைகள் கேட்ட போதிலும் காலந்தாழ்த்தி மழுப்பி வந்தனரே தவிர பதில் ஏதும் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வித்தியின் மறைவுக்குக் காரணமானவர்களே பவானின் கொலைக்கும் காரணமாகியுள்ளனர். புளொட் தலைமையில் அண்மைக்கால சதி நடவடிக்கையில் இதேபோன்று தமிழ்த் தேசிய ஆதரவு புளொட் உறுப்பினர் மணியும் கடத்தப்பட்டு இதே பாணியில் கொல்லப்பட்டார். புளொட் தலைமையின் பணப்பறிப்பு நடவடிக்கையையும் பவான் எதிர்த்துவந்தார். அத்துடன், தலைமையின் கபடத்தனமான அரசியல் போக்குத் தொடர்பாக பவான் பல தடவைகள் தலைமையுடன் கருத்து மோதலில் ஈடுபட்டுள்ளார். புளொட் அமைப்பின் இவ்வாறான கொலை நடவடிக்கைகளால் நிர்க்கதி நிலைக்


வித்தி

குள்ளாக்கப்பட்ட குடும்பத்தினருக்கும், தமிழ்த் தேசியத்திற்கும் ஆதரவான தமிழ் மக்களுக்கும் புளொட் தலைமை பதில் கூறியே ஆகவேண்டும்.

இவ்வண்ணம், தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான புளொட் உறுப்பினர்கள்- என்றுள்ளது

(ஒ)

### 'லைசன்ஸ்' பெற விண்ணப்பித்தோருக்கு

சாரதி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்தவர்களில் நாளை புதன்கிழமை செயல்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 9 மணி முதல் இப்பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயனில் இரண்டாம் பக்கத்தில் வெளியான செய்தியில் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவிருந்த செயல்முறைப் பரீட்சை எனத் தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை எதிர்வரும்புதன்கிழமை (19.07.2006) என்று திருத்தி வாசிக்கவும்.

### தொழிற்பயிற்சி பெறுபேறுகள்

யாழ். வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட தொழில்திறன் பயிற்சிகளுக்குரிய பெறுபேறுகளை அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தி. செல்வரத்தினம் தெரிவித்தார்.

(204)

# யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்துக்கு சிறப்புநிலைத் தெரிவில் 120 மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 18

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்கு 2005-2006 ஆம் கல்வியாண்டுக்காக சிறப்புநிலைத் தெரிவில் 120 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் நேற்றுத் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கலைப் பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் மற்றும் சுட்டெண் விவரம் வருமாறு:-

கே.ராசலட்சுமி -9411224 ஆர்.சிறீநாத் -9418512, ஆர்.அரிச்சந்திரன்-9589288, எஸ்.சுகிர்தா - 9427260, கே.சந்திரகாசன் - 9214127, எஸ்.அருமைச்சந்திரன் - 9445277, எம்.ராகினி - 9448470, எம்.மோகனகிருஸ்ணா், 9386491, எஸ்.நிகாசன் -9436910 எம்.அனுஷா - 9409890, எஸ் சுலக்சனா 9415505, கி.கனகசபை 9380019-

எஸ்.சுகுணா - 9399330, எஸ்.சிவரூபன் - 9400419, கே.சுவேதிகா - 9405356, கே.கிருஷ்சாந்தி - 9448942, கே.குமரேசன் - 9406298, ஏ.செல்வநேசம் - 9310061, கே.சரிதா - 9405720, கி.கரளசிங்கம் - 9438513, டி.டிரஞ்சனா - 9328416, எஸ்.லோசனா - 9417818, எஸ்.சங்கரேஸ்வரி - 9328530, கே.சபேசன் - 9435174-

ஆர். சத்தியா - 9427406, எஸ்.வெள்ளியன்- 9378103, எஸ்.துரைராசசிங்கம் - 9232990, கே.கவிதா - 9425799, ஏ.வானதி - 9432400, எஸ்.செல்வகுமாரி - 9240349, மு.சூசை - 9327886, கே.கமலராஜ் - 9391541, எஸ்.சோபிகா - 9308717, எல்.அர்ச்சனா- 9358064, எஸ்.சிவநதி - 9454569, ஜி.திருநடராஜா - 9445188, கே.கஸ்தூரி - 9398988, பி.முகுந்தன் - 9436987, எம்.கோகிலசெல்வி - 8674191, எஸ்.தம்புத்துரை - 9378529, ஜே.திருவரங்கன் - 9454098, எம்.ஏ.எப்.அமிர்தநாதர் - 9327894, கே.டயானா - 9399070, பி.பிரசாத் - 9424032, ரி.விஜிதா - 9405810, வி.சேனாதிராஜா - 9311866, ஏ.வேலுச்சாமி- 9233040, பி.லவகாந் - 9386629, எஸ்.தவசீலன் - 9152377, எஸ்.நிருசன் - 9332332-

ஏ.றேகா -9334688, எஸ்.அனுஷா - 9399855, எம்.தனுசுயா - 9393102, எஸ்.அஜந்தன் - 9327762, எஸ்.நல்லையா -9313397, ஆர்.சுதன் - 9254315, ஜே.ஜெசிந்தன் - 9437584, என் ருசாந்தன் - 9199152, வி.ஜெகன் - 9251111-

வி.யோகேஸ்வரி - 9240756, எஸ்.ஜெயசீலன் - 9310185, வி.மகாலிங்கம்-9450343, ஆர். ஜெயந்தினி - 9240730, என். ஜெயகுமார் - 9226907, எஸ். சேபோஜினி - 9364676, பி.தட்சாயினி - 9337202-

பி.சிவலிங்கம் - 9311718, எம்.சத்தியப்பிரியா-9252720, எஸ்.லாவண்யா-9234977, எஸ். நரசிங்கம் - 9412050, வி.திலகவதி- 9253769, ஜே.எம்.சகாயநேசன்- 9314954, ஆர்.அனுராகரன்-9447229, ஒ.ஸ்ரனிஸ்லஸ் 9415009,

என்.பத்மராஜா - 9393730, ஆர்.ஜோன்பிள்ளை-9327924, ஜே.செல்வராஜா -9409602, கே.சந்திரமோகன் - 9311653, எஸ்.டெனிஸ்டா -9234950, என்.ருஷாந்தன் - 9151990, எஸ்.கவிதாஸ் - 9239779, எஸ்.பவானந்தன்- 9454110, எஸ்.துர்க்காசினி- 9195297, ஏ.எஸ்.குரூஸ் - 9323635, கே.அம்பிகை 9399100, ஏ.ஆர்.எல்ரன்- 9340750, ஜே.ஸ்ரெல்லா - 9415831, கே.நர்மதா - 9400753, ஜே.எவ்.சேவியர் - 9444890, ஜே.பீற்றர் - 9296166, எஸ்.ஜெயரஞ்சினி - 9411240, எஸ்.நிலாஜினி- 9400826 ஜே.கட்சன் - 9326871, எஸ்.பிரேமினி 9448462, சி.எஸ்.சேவியர் - 8748624, வி.ஜே.இந்திகா - 9353500, ஆர். வினோதன் - 9410791, கே.மணிவண்ணன் -9424458, என்.கரன் - 9355162, எஸ்.ராஜினி - 941 1437, எம்.நிரோஜினி - 9380809, ஏ.பிரபாகரன் - 9393986, எஸ்.சுரேந்திரன் - 9371818, எஸ்.உருத்திரன் - 9451200-

ரி.ஜெயராசா - 9326804, எஸ்.சர்மிளா - 9400800, எஸ். கஜேந்தினி - 9420240, பி.கஜித்தா - 9415335, ரி.துவாகன் - 9401504, எஸ்.தமிழினி - 9308636, ரி.சிறிசுபாஜினி - 9399437, கே.சரிதா - 9400958, டி.வசிகரன் - 9375520, கே.சிவநந்தன் - 9310584, எஸ்.பொன்னம்பலம் - 9369295,

பி.சசிப்பிரியா - 9399569, ஏ.எம்.அலன் 9315357, கே.ரஜிதா - 9419217, கே.சற்குணராஜா - 9413782, எஸ்.சூரியதாசன் - 9327002-

(204-202)

# கைது செய்யப்படும் நபர்களின் மனிதஉரிமைகளைப் பேணுங்கள்!

## படைத்தளபதிகள், பொலீஸ் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி இறுக்கமான அறிவுறுத்தல்

கொழும்பு,ஜூலை18

அவசரகால சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்படும் நபர்களின் மனிதஉரிமைகளை உறுதி செய்யும் வகையில் முப்படைத் தளபதிகளுக்கும் பொலீஸ் அதிபருக்கும் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ இறுக்கமான அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

நபர்களை சகட்டுமேனிக்கு கைது செய்து நினைத்தபடி காவலில் வைப்பதையும், சட்ட விதிகளும், ஒழுங்கும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதையும் தவிர்க்கவும் அப்பாவி மக்கள் அதிகாரிகளால் துன்புறுத்தப்படுவதையும் தவிர்க்கவுமே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்று தெரிகிறது.

இவ்வறிவுறுத்தல்களின்படி கைது செய்யப்படுவோர் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்படுவோரின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் உறுதிசெய்யப்பட வேண்டும். மேலும் படையினர் தமது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போதும் கடமைகளை நிறைவேற்றும் போதும் மனித உரிமை ஆணைக்குழு அல்லது அதனால் உரிமையளிக்கப்பட்ட குறிப்பிட்ட நபர்தமது கடமையை நிறைவேற்றவும் அதிகாரங்களைப் பிரயோகிக்கவும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வசதிகளை செய்து கொடுக்கவும் வேண்டும்.

அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகளைத் தவிர வேறுஎவரும் எந்த நபரையும் எந்தவொரு அவசரகாலகட்டத்தின் அல்லது பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யவோ தடுப்புக்காவலில் வைக்கவோ முடியாது.

படைத்தளபதிகளுக்கும் பொலீஸாருக்கும் ஜனாதிபதி விடுத்துள்ள அறிவுறுத்தலின் முக்கியமான அம்சங்கள் வருமாறு:-

ஒருவர் கைது செய்யப்படும்போது அவரோ அல்லது அவரது உறவினர் அல்லது நண்பர்கள் கேட்டுக்கொள்ளும் இடத்து கைது செய்யும் அல்லது தடுப்புக் காவலில் வைக்கும் அதிகாரி தமது பெயரையும் பதவியையும் தெரிவித்தல் வேண்டும்.

கைது செய்யப்படுவதற்கு அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்படுவதற்கான காரணத்தை அவருக்குத் தெரிவிக்கவேண்டும்.ஒருவரைக் கைது செய்யும்அல்லது தடுப்புக் காவலில் வைக்கும் அதிகாரி அது தொடர்பாக அவரது மனைவி, தந்தை, தாய் அல்லது வேறு நெருங்கிய உறவினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால்கொடுக்கப்பட்ட மாதிரியில் ஆவணமொன்றை வழங்க வேண்டும். அதில் அதிகாரியின் பெயர், தாம் கைது செய்த நேரம், திகதி மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் போன்ற விவரங்கள் இருக்கவேண்டும்.

கைது செய்யப்படுபவர் விடுவிக்கப்படும் போது ஆவணம் திருப்பிக்கொடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு ஆவணமொன்றை வழங்குவது சாத்தியமில்லாத வேளையில் அவர் ஒரு பொலீஸ் அதிகாரியாக இருப்பின் ஆவணம் வழங்க முடியாமைக்கான காரணங்களை தகவல் புத்தகத்தில் பதிய வேண்டும். ஆயுதப் படையைச் சேர்ந்தவராயின் அவ்வாறான பதிவுகளை மேற்கொள்ளும் கடமைப் பொறுப்புள்ள பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு ஏன் முடியவில்லை என்பதை விளக்கி ஆவணமொன்றை வழங்கவேண்டும்.

மேலும் கைது செய்யப்பட்டவர் தாம் இருக்கும் இடத்தை உறவினர் அல்லது நண்பருக்கு தெரிவிக்க விரும்பின் அதற்கு நியாயமான வழிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

**பெண்கள், சிறுவர்கள் கைதாகும்போது**

பெண் ஒருவர் அல்லது 18 வயதிற்குட்பட்ட சிறுவர் ஒருவர் கைது அல்லது காவலில் வைக்கப்படும் போது தாம் விசாரிக்கப்படும் இடத்துக்கு தாம் விரும்பும் ஒருவரை அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும். இவ்வாறு கைது செய்யப்படும் பெண் அல்லது சிறுவர் கூடியவரை மகளிர் படையின் பாதுகாப்பில் வைக்கப்படவேண்டும்.

கைது செய்யப்படும் நபரின் வாக்குமூலத்தை அவர் விரும்பும் மொழியில் பதிவு செய்தல் வேண்டும் அவர் தமது வாக்குமூலத்தை தாமே எழுத விரும்பின் அவ்வாறு செய்ய அனுமதிக்க வேண்டும்.

கைது செய்யப்பட்ட அல்லது காவலில் வைக்கப்பட்ட ஒருவரைச் சந்திப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அல்லது அதன் உறுப்பினர் ஒருவர் அல்லது அதனால் உரிமையளிக்கப்பட்ட ஒருவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். சந்தேகநபர் வைக்கப்பட்டுள்ள இடத்திற்குள் பிரவேசிக்க எந்தவொரு நேரத்திலும் அவர்களுக்கு அனுமதியளிக்க வேண்டும்.

ஒருவர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்படவேண்டிய, சந்தர்ப்பத்தில் அவ்வாறு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரியால் உடனடியாக அல்லது 48 மணிநேரத்துக்குள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அல்லது அதன் அதிகாரம் பெற்ற நபருக்கு அது பற்றியும் அவர் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பது பற்றியும் அறிவிக்கவேண்டும்.

இவ்வாறு படை அதிகாரிகளுக்கும் பொலீஸ் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி விடுத்துள்ள அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் நிறைந்த சமூகம் உருவாகுவதற்கு தலைவரின் சிந்தனைப்படி பணிகள் முன்னெடுப்பு

## தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி

ஒழுக்கமும் நேர்மையும் இனப்பற்றும் தேசப் பற்றும் உடைய அறிவியல் நிறைந்த சமூக மாக நாம் திகழவேண்டும் என்ற தேசியத் தலைவர் அவர்களின் நோக்கிற்கு அமைய கல்வி மேம்பாட்டுக்கு நிறைந்த பணிகள் விடு தலைப் புலிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ நிதித் துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி.

தமிழீழ விடுதலைப் புலிகளால் கிளி நொச்சி மகாவித்தியாலயத்திற்கு லெப். சலன், வீரவேங்கை ஆனந்த் ஆகியோர் நினை வாக கட்டப்பட்ட பாடசாலை வகுப்பறைக் கட்ட டங்கள் கடந்த சனிக்கிழமை கையளிக்கப் பட்டன. இந்த மாடிக்கட்டடம் 85 லட்சம் ரூபா வுக்கும் அதிகமான நிதியில் விடுதலைப் புலிகளால் கட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் அணித்தளபதி லெப். சீலன், அவ ருடன் வீரச்சாவைத் தழுவிய வீரவேங்கை ஆனந்த் ஆகியோரின் 23ஆம் ஆண்டு நினைவு நாளில் அம்மாவீரர்களின் நினைவாக அமைக் கப்பட்ட கட்டடம் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் யோகநாதன் தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதிகள் முற்பகல் 9 மணிக்கு மாணவர் களின் அணி யிசை வகுப்புடன் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நிகழ்வில் பொதுச்சுடரை வட போர் முனைத் தளபதிகளில் ஒருவரான அமுதாப் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியை வணிக ஒன்றியத்தலைவர் வெற்றியரசன் ஏற்றி னார்.

கட்டடத்துக்கான ஆவணத்தை தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி கையெழுத்திட்டு பாடசாலை முதல்வர் யோக நாதனிடம் கையளித்தார்.

கட்டடத்துக்கான பெயர்ப்பலகையை கிளி நொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுல ராசா திரைநீக்கம் செய்துவைக்க கற்பொறிப்பை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பா ளர் சோ.தங்கன் திரைநீக்கம் செய்தார்.

பாடசாலை கீழ்த்தள வகுப்பறையை தமி ழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங் குமரன் நாடாவை வெட்டி திறந்துவைக்க, வகுப்பறைக்கு ஒளிச்சுடரை தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஸ்ணன் ஏற்றினார்.

வீரவேங்கை ஆனந்தின் திருவுருவப் படத் துக்கு மருதம் வாணிபப் பணிப்பாளர் இள வாணன் மாலை அணிவிக்க ஈகச்சுடரை பொறி யிலாளர் ஐ.பாலசுப்பிரமணியம் ஏற்றினார்.

மேல்மாடி வகுப்பறைகளை சார்ள்ஸ் அன் ரனி சிறப்புப் படையணி சிறப்புத்தளபதி கோபித் நாடாவை வெட்டி திறந்தார்.

லெப். சீலனின் திருவுருவப்படத்துக்கு தமி ழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ. முகுந்தன் மாலை அணிவிக்க ஈகச்சுடரை புலிகளின்குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஏற்றினார்.

இந்நிகழ்வில் செ.வ.தமிழேந்தி தொடர்ந்து உரையாற்றுகையில் -

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த நாள் பரிசாக இந்தக் கட்டடம் வழங் கப்பட்டுள்ளது.

எமது தேசத்தின் விடுதலையுடன் எமது மக்கள் எல்லாத்துறைகளிலும் எல்லா வகை யிலும் முன்னேறவேண்டும் என்று உழைத்துக் கொண்டிருக்கும் தேசியத் தலைவரின் எண் ணங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கவேண் டும் என்ற நோக்கத்துடன் அவருடைய 50



ஆவது பிறந்தநாளையொட்டி வாய்ப்பு வசதி குறைந்த பாடசாலைகளுக்கு கட்டடங்களை வழங்குதல் என்ற முடிவின்படி இதுவரை மூன்று கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு கையளிக் கப்பட்டுள்ளன. இன்னும் மூன்று பாடசாலை களுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண் டிருக்கின்றன.விரைவில் அந்தக்கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு கையளிக்கப்படவுள்ளன. மிகுந்த இடர்களின் மத்தியில் திரட்டப்படும் நிதியைக் கொண்டு இந்தக்கட்டடங்கள் கட் டப்படுகின்றன.

இந்த மண்ணில் வாழும் மக்கள் அனைவர தும் பங்களிப்பால் கிடைத்த நிதி என்பதை மாணவர்கள் மனதில் கொண்டு முழுமையான அக்கறைகொண்டு செயற்படவேண்டும். இந்த நாடு விடுதலையடைகின்றபோது இந்தத் தேசத்தை ஆளுகை செய்யக்கூடியவர்கள் இந்த இளந்தலைமுறையிலிருந்து உருவாகி வரவேண்டும்.

எல்லா வகையிலும் எமது சமூகம் முன் னேறவேண்டும்.எமது தேசியத்தலைவரின் காலத்தில் நிச்சயமாக எமது தாயகம் விடு தலை பெறும்.அந்தக் காலத்தில் நமது தலை முறை விடுதலைத் தேசத்தை ஆளுகை செய் கின்ற தலைமுறையாக முன்னேறவேண்டும் - என்றார்.



பாடசாலைக் கட்டடத்துக்கான ஆவணத்தை தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமி ழேந்தி அதிபரிடம் கைளிப்பதையும் பாடசாலை கீழ்த்தள வகுப்பறையைத் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் நாடா வெட்டித் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

## விளையாட்டு விழா

ஒட்டுசுட்டான்,ஜூலை17

முத்துவிநாயகபுரம் முதலாம் கண்டம் முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், முன்பள் ளிக் கல்வி மேம்பாட்டுக் கழகம் ஆகியவற் றின் ஆதரவுடன் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் இந்த முன்பள்ளியின் விளை யாட்டு விழா ஒட்டுசுட்டான் முன்பள்ளி மேம்பாட்டுத் தலைவர் சி.சந்திரகுமார் தலை மையில் நடைபெற்றது.

கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலை வரின் ஆசியுரையுடன் சத்தியப்பிரமாணம் எடுக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன.

விளையாட்டுப் போட்டி முடிவில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப் பட்டன.

நிகழ்வில் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் ஆ.திருநாவுக்கரசு, முன்பள்ளி கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் லோகேஸ்வரி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

(203-341)

## சுகாதாரக் கருத்தரங்கு

புதுக்குடியிருப்பு,ஜூலை17

புதுக்குடியிருப்பில் முன்பள்ளி மாணவர் களின் சுகாதாரத்தைப் பேணும் நோக்குடன் முன்பள்ளிகள் தோறும் சுகாதார விழிப்புணர் வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழீழ சுகாதார சேவையினர், பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் இணைந்து இக்கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு முன்பள்ளிகளிலும் சிறார் களின் பெற்றோர் அழைக்கப்பட்டு பொது வாக வீடுகளில் கடைப்பிடிக்கவேண்டிய சுகாதாரச் செயற்பாடுகள் தொடர்பாக அறிவு ரைகளும் -

சிறார்களுக்கும் சுகாதாரத்தைப் பேணும் அறிவுரைகளும் வழங்கப்பட்டு வருகின் றன.

(203-353)

## தென்னை உரம் பெற்றுக்கொள்ளலாம்

ஒட்டுசுட்டான்,ஜூலை18

தென்னை உற்பத்தியாளர்களுக்குத் தேவை யான தென்னை உரம் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் உள்ளது என்றும் தேவைப்படுவோர் உரத்தினை ரூபா 850 இற் குப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கமநல சேவை நிலைய கமக்கார அமைப்பு பிரதிநிதி களுக்கான சந்திப்பின்போது ஒட்டு சுட்டான் கமநல சேவை அதிகாரி தெரிவித்தார்.

(203-341)

# செஞ்சோலை 15ஆம் ஆண்டு நிறைவு உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு,ஜூலை18

செஞ்சோலை மகளிர் வித்தியாலயத்தின் 15ஆம் ஆண்டு நிறைவு நாள் மற்றும் கடற் கரும்புலி மேஜர் காந்தரூபன் நினைவுநாள் நிகழ்வுகள் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றன.

செஞ்சோலை மாணவி மகிழினி தலை மையில் அன்று மாலை 4.30 மணிக்கு நிகழ்வு கள் ஆரம்பமாகின.

நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழக் கல் விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை லெப். கேணல் நவம் அறிவுக் கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் ஏற்றினார். கடற்கரும்புலி காந்த ரூபனின் திருவுருவப்படத்துக்கும் நினைவுத் தூபிக்கும் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

செஞ்சோலை மகளிர் வித்தியாலயக் கொடியை வித்தியாலயத்தின் பொறுப்பா ளர் ஜனனி ஏற்றினார். செஞ்சோலையின் வர லாற்றுத்தடங்களைச் சித்திரிக்கின்ற ஒளிப் படக் கண்காட்சியும் மாதிரி அமைப்புக்களும் நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுக்குக் காண் பிக்கப்பட்டன.

அரங்க நிகழ்வுகள் செஞ்சோலைப் பொறுப் பாளர் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் செஞ்சோலையின் 'எண்ணக் கரு' என்ற நூலை செஞ்சோலைப் போராளி தனுஜா வெளியிட வணிகர் ஒன்றியத் தலை வர் வெற்றியரசன் பெற்றுக்கொண்டார். மாணவி திருமதி அருணா எழுதிய நூலை நூலாசிரியர் வெளியிட்டுவைக்க தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங் குமரன் பெற்றுக்கொண்டு கருத்துரை நிகழ்த் தினார்.

செஞ்சோலையின் வரலாறுகளை உள்ள டக்கிய நூல்களும் வெளியிடப்பட்டன. இந் நூல்களை கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, விடுதலைப் போராட்ட வரலாற்றுப் பிரிவுப் பொறுப்பா ளர் யோகரத்தினம் யோகி ஆகியோர் பெற் றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலி களின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமா ரன் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பரந்துபட்ட இரசனையூடாக விரிந்த தேடல் விரிந்த பார்வைகள் உள்ளன. அவருடைய போர் அணியே அவ்வாறுதான் உருவானது. - என்றார்.

கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பா ளர் குருகுலராஜா உரையாற்றுகையில், கடந்த 15 ஆண்டுகளில் செஞ்சோலையின் மாண வர்கள் இந்த நிலத்தின் விளைபொருள்களாக சமுதாயத்தில் வெளியேறியுள்ளனர். செஞ் சோலையின் பாடசாலைக்கு நிரந்தரக் கட் டடத்தை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறோம். அப்பாடசாலை செஞ் சோலை மாணவர்களையும், காந்தரூபன் அறிவுச்சோலை மற்றும் வெளி மாணவர் களையும் இணைத்துச் செயற்படுகின்ற ஒரு பாடசாலையாகச் செயற்படும் என்று எதிர் பார்க்கின்றோம் - என்றார்.

முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப் பாளர் ப.அரியரத்தினம் கருத்துரையாற்றுகை யில், செஞ்சோலையின் கல்விச் செயற்பாடு களில் குழந்தைகளின் பண்புகள், ஒழுக்கம், ஆசிரியர் - குழந்தைகள் உறவுகள் என்பன சிறப்பாக விளங்குகின்றன. - என்றார்.

இந்நிகழ்வில் செஞ்சோலை மாணவி களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ரி)

## சிறந்த பயிற்சியாளருக்கு பரிசில்கள்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முதலுதவி ணியினருக்குத் தமிழீழ சுகாதார சேவை னரால் நடத்தப்பட்ட பயிற்சியில் தெரிவு சய்யப்பட்ட சிறந்த பயிற்சியாளர்களுக் ப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கான பரிசில்களை மாவட்ட ரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், யாகதீபம் திலீபன் மருத்துவமனை சிறப்பு ருத்துவர் ஈழவாணி, ஒட்டுசுட்டான் கோட்ட பாறுப்பாளர் தமிழரசன் ஆகியோர் வழங் னர்.

சிறந்த பயிற்சியாளர்களாக செல்வி நிமல ாணி, செல்வி நிலானி, செல்வன் நகு லந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட் னர்.

(203-341)




## வெள்ளாங்குளம் வைத்தியசாலையில் அடிப்படை வசதியின்மையால் சிரமம்

பரந்தன்,ஜூலை18

மன்னார் வெள்ளாங்குளம் வைத்திய லையில் அடிப்படை வசதிகள் இன்மை ல் நோயாளர்களும் வைத்தியசாலைப் ணியாளர்களும் பெரும் சிரமங்களை எதிர் ாண்டு வருகின்றனர்.

வைத்தியசாலையின் சுற்றுப்புற வேலிகள் மைக்கப்படாமையால் கால்நடைகள் வத்தியசாலைகளுக்குள் புகுந்து அசிங்கம் சய்துவருகின்றன.

இதுமட்டுமன்றி குழாய் மூலமான நீர் வழங்கும் இடங்களில் கழிவுநீர் அகற்றப் படாது சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது. அத் துடன் விடுதியில் உள்ளவர்கள் குளிப்பதற்கு மறைப்புகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக் கப்படவில்லை.

இவ்வாறான காரணங்களால் நோயாளர் களும் பணியாளர்களும் பெரும் சிரமங் களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக் கப்பட்டது.

(203-352)

## முள்ளியவளையில் கசிப்பு உற்பத்தி: இருவருக்குச் சிறைத்தண்டனை

முள்ளியவளையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் முள்ளியவளை தமிழீழ காவல்துறையின ரால் கைதுசெய்யப்பட்ட இருவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்கள் இருவரையும் மேலதிக விசா ரணைகளுக்காக முல்லைத்தீவு நீதின்றத்தில் காவல்துறையினர் ஆஜர் செய்தனர்.

அங்கு இடம்பெற்ற விசாரணைகளின் போது அவர்கள் இருவரும் குற்றத்தை ஒப் புக்கொண்டனர்.


அதனையடுத்து ஒருவருக்கு 8 மாதச் சிறையுடன் 10 ஆயிரம் ரூபா அபராதமும் மற்றவருக்கு 6 மாதச் சிறையும் 6 ஆயிரம் ரூபா அபராதமும் முல்லைத்தீவு குற்றவியல் நீதியாளரால் விதிக்கப்பட்டது. ( 203-352)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இட்ட லிங்காய நம
பார்த்திப வருடம் ஆடி மாதம் அச்சுவினி நட்சத்திரத்தில்
இலிங்க ஐக்கியமான இணுவில் மேற்கைச் சேர்ந்த வீரசைவ
குலத்திலகர் மார்க்கண்டு பரமசாமி (சின்னமணி ஐயா)
அவர்களின் முதலாவது

## இலிங்க ஐக்கிய தினம்

தோற்றம் 03 . 11 . 1936



மறைவு 28 . 07 . 2005

சிவ சோதியாக சிவசோதியுடன் ஐக்கியமான எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா என்றும் இன்பமாக அரனோடிருந்து எங்களை ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம்.

"கமல வாசம்"
இணுவில் மேற்கு, இணுவில். (52311)(39.14.11.26)

அன்புடன் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 17 . 04 . 1917



மறைவு 18 . 06 . 2006

### திருமதி சின்னம்மா தம்பிஐயா
*(மலாயன் பென்சனர்)*

வைரவப் பெருமான் திருவடியில் அமைதி காணும் எமது அன்புப் பப்பாவின் அரவணைப்பில் இணைந்திருக்கும் உங்கள் செல்வப் புதல்விகளான சகோதரிகள் தேவராணி, கமலராணி இருவரையும் அணைத்து ஆறுதலடைந்திருக்கும் எங்கள் அன்பு அம்மா ! உங்கள் 31 ஆம் நாள் பிரார்த்தனையில் உங்கள் எல்லோரது ஆத்மாக்கள் சாந்திபெற வைரவப் பெருமான் அருளட்டும்.

எங்கள் அன்புத் தாயின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு அவரின் இல்லத்தில் இன்று (18.07.2006) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இந்த அஞ்சலி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

'ஆர்த்தியம்பதி',
இணுவில் மேற்கு, இணுவில் (52320)(26.11.14)

- குடும்பத்தினர்.


YAARL TECH SYS.
AIMST University-Malaysia
Sir Pon Ramanathan Road, Kaladdy Junction
(Near Jaffna University) - 0779 004129

அனுமதிக்கட்டணத்துடன் மட்டும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Diploma in Micro Soft Office Management
- Diploma in Desktop Publishing & Designing
- Diploma in Web Page Designing & Developing
- Diploma in computer Hardware Technology

பயிற்சிக் கட்டணம் முற்றிலும் இலவசம்
ஒரு பிரிவில் 5 பேருக்கு மட்டுமே அனுமதி
இச்சலுகை யூலை 25 வரை மட்டுமே.

100% Learn Practicals London Info Tech
இன் தமிழ் மொழி மூல CD வழிப் பயிற்சி
(ஒவ்வொன்றும் 2 1/2 மணிநேர வீடியோ பயிற்சி)

MAYA VOL 1, 2 & 3 | 3D MAX VOL 1 & 2 | PREMIER VOL 1 | PHOTO SHOP VOL 1 | FLASH VOL 1 | COREL DRAW VOL 1

கொழும்பு London Info Tech இன் முதன்மை ஆசிரியர்களினால் விரிவான விளக்கங்களுடன் தயாரிக்கப்பட்ட முழுமையான பாடத்திட்டம்
ஒருமுறை PASSWORD எடுத்தால் போதுமானது

கிடைக்குமிடம் மற்றும் தொடர்புகளுக்கு
YAARL TECH SYS.
MULTIMEDIA COLLEGE
Sir Pon Ramanathan Road, Kaladdy Junction
(Near Jaffna University) - 0779 004129


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை18

நாயன்மார்க்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ்ப்பாணம் கல்வியங்காடு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் ஆலய பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆடிப்பூர தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ரி)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை18

வவுனியா கோயில்குளம் அகிலாண்டேசுரர் ஆலய பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (202)

## விபத்தில் காயம்

தென்மராட்சி, ஜூலை18

மணல் ஏற்றிவந்த பாரவூர்தி வீதியில் மிதிவண்டியில் வந்தவரை மோதிக் காயப்படுத்திய சம்பவம் அண்மையில் கச்சாயில் இடம்பெற்றது.

தலையில் காயமடைந்த மீசாலை அல்லாரையைச் சேர்ந்த சிற்சம்பு உதயகுமார் (வயது 23) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (1-117)

## வடமராட்சி கல்விவலய கட்டட அபிவிருத்தி

யாழ்ப்பாணம், ஜூலை18

பருத்தித்துறை ஓராம் கட்டைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வடமராட்சி கல்விவலய அலுவலக வளவில் சில அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

காணியின் எல்லைச் சுவர் அமைத்தல், குழாய்க்கிணறு அமைத்தல், கட்டடத்திற்கான மின் இணைப்பு வழங்கல் போன்ற அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கட்டட நிலை தொடர்பாக அண்மையில் செய்தி வெளியாகியதையடுத்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (117)

## ப.நோ.சங்கக் கிளைகளுக்கு ஊக்குவிப்புத்திட்டம்

அரியாலை,ஜூலை18

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் கூடுதல் விற்பனையை மேற்கொள்ளும் கிளை முகாமையாளருக்கு ஊக்குவிப்புப் பரிசுத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக மாதாந்தம் கிளைகளில் ரொக்க வியாபாரத்தில் கூடுதல் விற்பனையை மேற்கொண்ட மூன்று கிளை முகாமையாளர்களும், விற்பனையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

ஊக்குவிப்புப் பரிசினை சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.கவிந்திரதாஸ் வழங்கிக் கௌரவித்தார்.

சங்கத்தின் 17 ஆம் கிளை முகாமையாளர் சு.அகிலன், விற்பனையாளர் திருமதி இ.சற்குணம், 07ஆம் கிளை முகாமையாளர் சு.விமலநாதன், விற்பனையாளர் மு.அரியநாயகம், 18ஆம் கிளை முகாமையாளர் திருமதி த.புவனலோசனி, விற்பனையாளர் ... வாகீஸ்வரி. (117)

## நால்வருக்குப் பதவி உயர்வு

தென்மராட்சி, ஜூலை18

யாழ்.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பொது சுகாதாரப் பரிசோதகர்களாகப் பணியாற்றும் நால்வர் மேற்பார்வை பொதுசுகாதாரப் பரிசோதகர்களாகப் பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் இந்தப்பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

த.கிளின்டஸ் -சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கும், ந.சிவபாலன் - கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கும், எஸ்.தெய்வேந்திரன் சங்கானை-மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கும், எஸ்.திவ்வியகுமாரன் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கும் பதவியுயர்வு பெற்றுள்ளனர். (1-117)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 . 10 . 1953



மறைவு 18 . 07 . 2000

### அமரர் கந்தசாமி தர்மேசன்

(திட்டமிடல் உதவியாளர், வலிகாமம் கல்வி வலயம்,
உதவிச்சாரண ஆணையாளர்- காங்கேசன்துறை மாவட்டம்)

எம் கண்ணீர்த் துளிகள் வற்றவில்லை- ஆனால்
வருடங்கள் ஆறு சென்று விட்டன
எம் துயர் எம்மை விட்டு நீங்கவில்லை- உம்
நினைவில் தினம் தினம் வாடுகின்றோம்
ஓம் சாந்தி!

"தரன் இல்லம்"
தேவாலய வீதி,
மூளாய், சுழிபுரம்.

அன்பு மனைவி,
பாசமிகு முத்தரன்கள்.
(52305) (39.11.14.26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் உயர்திரு.
### வல்லிபுரம் மகாலிங்கம்

மொட்டாய் 11-10-1937
பொட்டாய் 18-06-2006

குன்றாய் மிளிர்ந்து குணமாய் வாழ்ந்து
அன்பினால் எங்களை அவனியில் ஆண்டு
பண்பாய் மண்ணில் வாழ்ந்து வருகையில்
வாழ்ந்தது போதும் என்றோ எண்ணி
எங்களைப் பிரிந்து விண்ணகம் சென்றீர்
தாங்குமோ அப்பா எங்கள் உள்ளம்
உங்களை எண்ணியே வாடுது நெஞ்சம்
கெஞ்சிக்கேட்கிறோம் இறைவனை நித்தம்
உங்கள் ஆன்மா சாந்திபெற வேண்டும் என்று.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

விடத்தற்பளை,
மிருசுவில். (52318) (26.11.14) -குடும்பத்தினர்.

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 25 * 10 * 1980



மறைவு 08 * 06 * 2006

### அன்னலிங்கம் உதயகுமார்

நெஞ்சிலே உம்மையிருத்தி
நினைவுகளில் உம்மை
நிறைத்து என்றென்றும் தங்கள்
ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கின்றோம்

41ஆம் நாள் நினைவு வீட்டுக்கிருத்தியமும் இன்று (18-07-2006) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந் நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (52312) (26.11.14)

தகவல்:
அன்னலிங்கம் (அப்பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்ட கனிஷ்ட மெய்வன்மை தடகள வெற்றிக்கிண்ணத்திற்கான விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் தலைவர் எம்.இளம்பிறையன், நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற முன்னாள் விளையாட்டுப் பணிப்பாளர் எஸ்.மரியதாஸ் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் -

சிறந்த வீராங்கனை ஒருவருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கப்படுவதையும் போட்டிகளில் கலந்துகொண்ட வீரர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

# கனிஷ்ட மெய்வன்மை, தடகளப் போட்டிகளில் திறமையை வெளிக்காட்டிய வீர, வீராங்கனைகள்




யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ். மாவட்ட கனிஷ்ட மெய்வன்மை தடகள வெற்றிக்கிண்ணத்திற்கான விளையாட்டுப் போட்டிகளில் வீர, வீராங்கனைகள் தமது திறமைகளை வெளிக்காட்டினர்.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத் தலைவர் எம்.இளம்பிறையன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற முன்னாள் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.மரியதாஸ் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

இப்போட்டிகளில் தமது திறமைகளை வெளிக்காட்டி வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**பெண்கள் பிரிவு**

✱ **16 வயதுப் பிரிவு** - சிறந்த தட நிகழ்ச்சிக்கான வீராங்கனை - துன்னாலை வல்லியானந்தா கழகத்தைச் சேர்ந்த எஸ்.பகீரதி 100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் 593 புள்ளிகளைப் பெற்று தட நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக் சிண்ணத்தைத் தட்டிச் சென்றார்.

✱ **16 வயதுப் பிரிவு** - சிறந்த கள நிகழ்ச்சிக்கான வீராங்கனை - துன்னாலை வல்லியானந்தா கழகத்தைச் சேர்ந்த எஸ்.பகீரதி நீளம்பாய்தலில் 640 புள்ளிகளைப் பெற்று சிறந்த கள நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **18 வயதுப் பிரிவு** - தள நிகழ்ச்சிக்கான சிறந்த வீராங்கனை - தனிப்பட்ட போட்டியாளராகக் கலந்துகொண்ட ஆர். வாகினி 100 மீற்றர் ஓட்டத்தில் 686 புள்ளிகளைப் பெற்று வெற்றிக்கிண்ணம் பெற்றுக் கொண்டார்.

✱ **18 வயதுப் பிரிவு** - கள நிகழ்ச்சிக்கான சிறந்த வீராங்கனை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வி.கஜிதா நீளம் பாய்தலில் 626 புள்ளிகளைப் பெற்று கள நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **20 வயதுப் பிரிவு** - தட நிகழ்ச்சிக்கான சிறந்த வீராங்கனை - இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த எஸ். யாழினி 400 மீற்றர் ஓட்டத்தில் 542 புள்ளிகளைப் பெற்று சிறந்த தட நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **20 வயதுப் பிரிவு** - கள நிகழ்ச்சிக்கான சிறந்த வீராங்கனை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ரி.கஸ்தூரி நீளம் பாய்தல் போட்டியில் 705 புள்ளிகளைப் பெற்று சிறந்த கள நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக்கிண்ணம் பெற்றுக்கொண்டார்.

✱ **23 வயதுப் பிரிவு** - தட நிகழ்ச்சிக்கான சிறந்த வீராங்கனை - மானிப்பாய் மெமோறியல் கல்லூரியைச் சேர்ந்த எம்.நிஷாந்தினி 200 மீற்றர் ஓட்டத்தில் 454 புள்ளிகளைப் பெற்று சிறந்த தட நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **23 வயதுப் பிரிவு** - கள நிகழ்ச்சிக்கான சிறந்த வீராங்கனை - சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.நிருசா நீளம்பாய்தலில் 533 புள்ளிகளைப் பெற்று சிறந்த கள நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

**ஆண்கள் பிரிவு**

✱ **10 வயதுப் பிரிவு** - 800 மீற்றர் ஓட்டம் முதலிடம், உயரம் பாய்தல் முதலிடம், நீளம் பாய்தல் இரண்டாமிடம், பந்து எறிதல் மூன்றாம் இடம், 100 மீற்றார் ஓட்டம் மூன்றாம் இடம் - சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா கல்லூரியைச் சேர்ந்த எஸ்.ரஜீவன் சிறந்த வீரருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **12 வயதுப் பிரிவு** - 100 மீற்றர், 800 மீற்றர் ஓட்ட நிகழ்வுகளில் முதலிடம் - மானிப்பாய் மெமோறியல் கல்லூரியைச் சேர்ந்த வி.நிரோஜன் சிறந்த வீரருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **14 வயதுப் பிரிவு** - 100 மீற்றர் ஓட்டம் முதலிடம், 200 மீற்றர் ஓட்டம் முதலிடம், 800 மீற்றர் தடைதாண்டல் போட்டி முதலிடம், நீளம்பாய்தல் முதலிடம், உயரம் பாய்தல் மூன்றாமிடம் - அளவெட்டி அருணாசலம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர்.நிருஜன் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

✱ **16 வயதுப் பிரிவு** - தட நிகழ்ச்சிக்கான சிறந்த வீரர் - ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எ.நிதர்சன் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 384 புள்ளிகளைப் பெற்று சிறந்த தட நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **16 வயதுப் பிரிவு** - கள நிகழ்ச்சிக்கான சிறந்த வீரர் - யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.ஹரிஸ் நீளம்பாய்தல் போட்டியில் 610 புள்ளிகளைப் பெற்று சிறந்த கள நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **18 வயதுப் பிரிவு** - தள நிகழ்ச்சியாளருக்கான சிறந்த வீரர் - யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ரி.தர்சன் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 856 புள்ளிகளைப் பெற்று வெற்றிக்கிண்ணத்தைப் பெழ்றுக்கொண்டார்.

✱ **18 வயதுப் பிரிவு** - கள நிகழ்ச்சியாளருக்கரன சிறந்த வீரர் - சங்கானை சிவப்பிரகாசம் பாடசாலையைச் சேர்ந்த எம்.கஜேந்திரன் நீளம் பாய்தலில் 633 புள்ளிகளைப் பெற்று சிறந்த வீரருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.


✱ **20 வயதுப் பிரிவு** - தட நிகழ்ச்சியாளருக்கான சிறந்த வீரர்- கே.கே.எஸ்.யுனைற்றட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாஸ் 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 580 புள்ளிகளைப் பெற்று சிறந்த தட் நிகழ்ச்சியாளருக்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **20 வயதுப் பிரிவு** - கள நிகழ்ச்சியாளருக்கான சிறந்த வீரர் - துன்னாலை வல்லியானந்தன் கழகத்தைச் சேர்ந்த எ.சுமேசன் நீளம்பாய்தலில் 769 புள்ளிகளைப் பெற்று சிறந்த வீரருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **23 வயதுப் பிரிவு** - தட் நிகழ்ச்சியாளருக்கான சிறந்த வீரர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மஜீபன் 100 மீற்றர் ஓட்டத்தில் 566 புள்ளிகளைப் பெற்று சிறந்த தட வீரருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

✱ **23 வயதுப் பிரிவு** - கள நிகழ்ச்சியாளருக்கான சிறந்த வீரர் - புனித ஹென்றியரசர் கல்லூரியைச் சேர்ந்த ஏ.ஏ.ரஜீம்ராஜ் நீளம் பாய்தலில் 872 புள்ளிகளைப் பெற்று சிறந்த கள வீரருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

(203-190)



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டப் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அழைத்துவரப்படுவதையும் யாழ். அரச அதிபர் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல் நட்டுவைப்பதையும் பாடசாலை அதிபர் ஒருவரிடம் உதைபந்து வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*

## உதைபந்தாட்டப் பயிற்சி நிலையம் பருத்தித்துறையில் அடிக்கல்

கரவெட்டி,ஜூலை 18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டப் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல் நட்டுவைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் ஆரம்பத்தில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் விளையாட்டு வீரர்களாலும் பிரமுகர்களாலும் நிகழ்வு இடத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ரி.வேதாபரணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

இந்நிகழ்வில் வண.பிதா டேவிட் அழகராஜா, மருதங்கேணி பிரதேச செயலர் வி.வீரபத்திரபிள்ளை, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வின்போது பாடசாலைகளுக்கு உதைபந்துகளை அரச அதிபர் பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார். (203-70)

# சென்றல் வி.க. அணியை ஜொலிஸ்ரார் வென்றது

யாழ்ப்பாணம்,ஜூலை18

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்ற சிநேகபூர்வமான கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த வாரம் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் [illegible] இந்த ஆட்டம் இடம்பெற்றது.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 66:48 என்ற புள்ளி அடிப்படையில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

இந்தப் போட்டிக்கு மத்தியஸ்தராக எஸ். சண்தயாளன், எஸ்.சிவதாஸ் ஆகியோர் கடமையாற்றினர்.

(1-190)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 18

சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழகத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ் .மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே கரப்பந்தாட்டச் சுற்றுப் (ஓவர்கேம்) போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் விண்ணப்பப் படிவங்களை எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் ''ரி.ராஜ்குமார், தலைவர், மகாத்மா விளையாட்டுக் கழகம், சாவற்காடு'' என்னும் முகவரிக்கு அனுப்புமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(1-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பாதுகாப்பு, தொழிற்பயிற்சி, உதவி நிதியை இலங்கை ஊடகவியலாளர் பெற 'சவ்மா' நடவடிக்கை

## வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை18

சர்வதேச ரீதியான பாதுகாப்பு, தொழிற் பயிற்சி, உதவி நிதி ஆகியவற்றை வடபகுதி ஊடகவியலாளர்களும் அனுபவிக்க நடவடிக்கை எடுப்பதென 'சவ்மா' எனப்படும் தென் ஆசிய சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் உறுதியளித்துள்ளது.

இவ்வாறு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென் ஆசிய சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் கடந்த மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்திய கருத்தரங்கை வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம் புறக்கணிக்கும் என முன்னர் அறிவித்திருந்தோம்.

ஆனால் இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், மலேசியா, தாய்லாந்து,நேபாளம் ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தென் ஆசிய சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் (சவ்மா) நடத்திய கருத்தரங்கில் எமது பிரதேச ஊடகவியலாளர் அனுபவிக்கும் சொல்லொணாக் கஷ்ரங்களையும் அவலங்களையும் எடுத்துரைக்கச் சந்தர்ப்பம் ஏற்படுமென எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

தென் ஆசிய சுதந்திர ஊடகவியலாளர் சங்க இலங்கைக் கிளைப் பொருளாளர் ரங்கா கலன்சூரிய, எங்கள் சங்கத் தலைவருடன் தொடர்புகொண்டு சர்வதேச பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் இக்கருத்தரங்குகளில் எங்களது பிரசன்னம் மிக முக்கியம் என்றும் இக் கருத்தரங்குகளில் நாம் முன்வைக்கும் கருத்துக்கள் சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்தார்.

இதற்கமைய எமது சங்கத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்கும் எமது சங்கத்தின் முக்கிய நிர்வாக உறுப்பினர்கள் அடங்கிய குழு சென்று எமது பகுதி ஊடகவியலாளர்கள் அனுபவித்துவரும் பயங்கர அவலங்களை சர்வதேச உலகிற்குப் பகிரங்கப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்திற்கமைய எமது சங்கத்தின் குழு கொழும்பு சென்றது. அங்கு இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், மலேசியா, தாய்லாந்து, நேபாளம் ஆகிய நாடுகளின் 'சவ்மா'வின் கிளைகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் அனுபவித்து வரும் பாதுகாப்பு, தொழிற்பயிற்சி, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நிதியம் என்பவற்றைப் போன்று எமது ஊடகவியலாளர்களும் அனுபவிக்க நடவடிக்கை எடுப்பதென உறுதியளிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களில் எமது தலைவர் முன்வைத்த ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பற்றிய இரு முக்கிய கோரிக்கைகள் சேர்க்கப்பட்டன.

ஊடகவியலாளர்கள் வன்செயல்களினால் பாதிக்கப்பட் டால் அல்லது இறந்தால் அவர்களுக்கான நிவாரணங்களை தென் ஆசிய சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் அங்கத்துவ சங்கங்களுக்கு அறிவித்து நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. ஊடகவியலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படும் போது அல்லது பறிக்கப்படும் போது அவைகள் சர்வதேச ஊடகவியலாளர்களின் பிரச்சினையாக முன்வைக்கப்பட்டு கையாளப்படும் என்ற பிரேரணையும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

160 பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக் கருத்தரங்கில் பாகிஸ்தானைச் சேர்ந்தவரான தென் ஆசிய சுதந்திர ஊடகவியலாளர் சங்கச் செயலாளர் நாயகம் இம்தியாஸ் அலாம் விசேட பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். அவர் உரையாற்றும்போது இலங்கையில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் கொலைகள், குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக, குறிப்பாக பெண்கள், சிறுவர்கள் உயிரிழப்பது பற்றி மிகக் கவலை தெரிவித்ததோடு, தெற்காசிய நாடுகளின் ஒருமைப்பாட்டிற்காகவும் நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஊடகவியலாளர்கள் பெரும் பங்கு வகிக்கமுடியும் என்றும் கூறினார்.

இக்கருத்தரங்கில் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், அம்பாறை, மலையகம் உட்பட பல பகுதிகளில் இருந்தும் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர் - இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

# உண்மையான விடுதலையைப் பெறவே தமிழ் மக்கள் ஓயாது உழைக்கின்றனர்!

### கட்டளைத் தளபதி லெப்.கேணல் நகுலன்



உண்மையான விடுதலையைப் பெறுவதற்காக தமிழ் மக்கள் அல்லும் பகலும் ஓயாது உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். விடுதலை என்ற இலட்சியத்திற்காகவே இவர்கள் பாடுபடுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கட்டளைத் தளபதி லெப். கேணல் நகுலன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் தளபதி லெப். சீலனின் 23 ஆவது நினைவு வணக்க நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே கேணல் நகுலன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உண்மையான விடுதலையைப் பெறுவதற்காகவே தமிழ் மக்கள் அல்லும் பகலும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் விடுதலை இலட்சியத்திற்காகவே ஓயாது உழைத்து வருகின்றனர்.தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் சிங்களப் பேரினவாதிகளுக்குத் தக்க பாடம் புகட்டப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை.

முதல் தாக்குதல் தளபதி லெப்.சீலன் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக உழைத்து அளப்பரிய சாதனைகள் நிகழ்த்தியுள்ளார்.

அதே போல் நடைபெறப் போகின்ற போரில் நவீன காலத்திற்கும் நவீன வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் சிறப்பாகச் செயற்பட்டுப் பாரிய வெற்றிகளைப் பெற்றுத்தரும் - என்றார். (203)

# பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை18

வடக்கு - கிழக்கு மாகாணக் கைத்தொழில் திணைக்களத்தால் யாழ். பிரதேச செயலகம் ஊடாக நடத்தப்படவுள்ள மரவேலைப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் நாளைக்கு முன்னர் தமது சுயவிவரங்களை பிரதேசசெயலர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஆறுமாத காலத்திற்கு நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியின்போது ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.(203)

# வணிகபீட மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை18

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முதலாம் பகுதி - I, பகுதி - II, பகுதி III வருட நிர்வாகம் மற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான 2004 - 2005ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைகளுக்குத் தோற்ற உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது பட்டப்படிப்பின் அனைத்து பாட அலகுகளிலும் சித்தியடைந்து, விண்ணப்பிக்கும் பாடத்தில் சித்தியடைவதன் மூலம் பட்டப் படிப்பை நிறைவு செய்யக் கூடியவர்களாக இருக்கவேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் பீடாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204)

# அங்கிலிக்கன் திருச்சபையினர் மன்னாருக்கு விஜயம்

மன்னார், ஜூலை 18

மன்னார் மாவட்டத்தின் சமகால நிலைமையைக் கண்டறியும் முகமாக அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் மற்றும் கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் அடங்கிய குழுவொன்று நேற்றுமுன்தினம் மன்னாருக்கு விஜயமொன்றை மேற்கொண்டது.

குறித்த குழுவினர் கடந்த மாதம் 17ஆம் திகதி தாக்குதலுக்குள்ளான பேசாலைப் பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் அங்குள்ள மக்களையும் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மீன்பிடித் தடை குறித்தும் கேட்டறிந்தனர்.

# உரும்பிராய் லயன்ஸ் கழக ஆண்டு விழா

உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக சபையின் பதவி ஏற்பு வைபவமும் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவும் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் லயன் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக பிராந்தியத் தலைவர் லயன் எஸ். சிவராஜேஸ்வரனும் கௌரவ விருந்தினராக கிளாக் கழகத் தாபகத் தலைவரும், முன்னாள் வடபிராந்திய மாவட்ட இணைப்பாளருமான லயன் ஆர். நடராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (204)

## துயர் பகிர்கின்றோம்

தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்

**சு.பாக்கியராசா** அவர்களின் தாய்

திருமதி **தையல்நாயகி சுப்பிரமணியம்**

அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்மராட்சி. - *முன்பள்ளி ஆசிரியர் சங்கம்.*

(52328)(21.11)

## கண்ணீர் அஞ்சலி

கைதடி மேற்கு, கைதடியைச் சேர்ந்தவரும் எமது தொப்புள்கொடி உறவுமான

செல்வன் **சிங்கராஜா அர்ஜுன்**

(அர்ச்சுன்)



அவர்கள் 15.07.2006இல் அகாலமரணமடைந்தமை கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபத்தைத் தெரிவிப்பதோடு அவர்களின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

கைதடி, நவபுரம். (52325) (21.11) **கைதடி, நவபுரம் வாழ் மக்கள்.**

## 31ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 20 - 07 - 1920



இறப்பு 18 - 06 - 2006

திருமதி

**தையல்நாயகி சுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கடந்த 18.06.2006 அன்று சிவபதமடைந்த எமது தாயாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (18.07.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் மகன் சு.பாக்கியராசாவின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- **பிள்ளைகள்.**

*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*

(சி-50203)(21.11)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நல்லையா



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட கந்தையா நல்லையா (ஓய்வுபெற்ற சாரதி - இ.போ.ச.) அவர்கள் 14.07.2006 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் திலகவதியின் அன்புக் கணவரும், தையலம்மா, காலஞ்சென்ற மார்க்கண்டு ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற அற்புதராஜன் மற்றும் ரவிராஜன் (ஜேர்மனி), மதிவதனி (பிரான்ஸ்), பிரியதர்சினி (ஜேர்மனி), கௌசலா (பிரான்ஸ்), மேகலா (சுவிஸ்), கோமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகாந்தன், வசந்தன், பாஸ்கரன், மதிவதனி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (18.07.2006) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ரவிராஜன்** (மகன்)
**T.P.: 0776354582**

**இல.39, மூத்த விநாயகர் வீதி,**
**முதலாம் ஒழுங்கை,**
**நல்லூர்.**

(52329)(21.11)

### சந்தியாப்பிள்ளை பாவிலுப்பிள்ளை

*(இராசா)*



சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்தியாப்பிள்ளை பாவிலுப்பிள்ளை (இராசா) நேற்று (17.07.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மேரி யோசேப் (கண்மணி) அவர்களின் அன்புக் கணவரும், ஞானமூலர், பாலா, மீரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சூசை, மாலினி, சீலன் ஆகியோரின் அருமை மாமனும் சுகன்யாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.07.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் புனித கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பாலா** (மகன்).

*சில்லாலை வடக்கு,*
*பண்டத்தரிப்பு.*

(52331)(21.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பை மீறி ஏவுகணைச் சோதனை; வடகொரியா மீது ஐ.நா. தடைவிதிப்பு!

நியூயோர்க்,ஜூலை18

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி கண்டம் விட்டுக் கண்டம் சென்று தாக்கும் ஏவுகணைச் சோதனை நடத்திய வடகொரியா மீது ஏவுகணை சோதனை நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

ஆனால், இத்தீர்மானத்தை நிராகரித்த வட கொரியா தொடர்ந்தும் ஏவுகணை சோதனையில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளது.

கம்யூனிச நாடான வடகொரியா 12 ஆயிரத்து 500 கி.மீ., தூரம்வரை சென்று தாக்கும் அதிநவீன ஏவுகணை சோதனைகளை நடத்தியது. இதற்கு தென்கொரியா, ஜப்பான், அமெரிக்கா உட்பட பல நாடுகள் கண்டனம் தெரிவித்தன. இந்நிலையில், வட கொரியாவுக்கு எதிராக ஜப்பான், பிரான்ஸ் மற்றும் அமெரிக்க நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் தீர்மானம் கொண்டுவந்தன.

அந்த தீர்மானத்தில், ஏவுகணை தடுப்புக் கருவி, ஏவுகணை தொடர்பான கருவிகள், மூலப்பொருள்கள் மற்றும் தொழில்நுட்பங்களை வட கொரியாவுக்கு அளிக்கவோ அல்லது பேரழிவு தரும் ஆயுதங்கள் தயாரிக்க நிதி உதவி அளிப்பதோ கூடாது. வட கொரியா மீதான இத் தடையை ஐ.நா. உறுப்பு நாடுகள் விதிக்க வேண்டும்-என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த தீர்மானத்தை ஐ.நா.,வின் சேப்டர் ஏழு விதியின் கீழ் நிறைவேற்ற அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் முடிவுசெய்தன. ஆனால், இந்த விதியின் கீழ் நிறைவேற்றினால் வடகொரியா மீது பொருளாதாரத் தடை விதிக்க மட்டுமன்றி போர் தொடுக்கவும் வழி ஏற்படும். எனவே, இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. அவ்வாறு கொண்டு வந்தால் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி, அதை ரத்துச்செய்யப் போவதாக ஐ.நா.வுக்கான சீன தூதர் வாங் குவாங்யா உறுதியாகத் தெரிவித்தார்.

இக்கட்டான சூழ்நிலை காரணமாக தீர்மானத்தை அறிமுகம் செய்வது 30 நிமிடங்கள் தள்ளி வைக்கப்பட்டது. பின்னர் சீனாவுடன் ஜப்பான் செய்த சமரச முயற்சி காரணமாக, சேப்டர் ஏழு விதியின் கீழ் அல்லாமல் தீர்மானம் நிறைவேறியது.கடந்த சனிக்கிழமை நிறைவேறிய அந்த தீர்மானத்துக்கு, பாதுகாப்பு சபையில் உள்ள 15 நாடுகளும் ஏகமனதாக ஆதரவளித்தன. இதைத் தொடர்ந்து வடகொரியா மீதான, ஏவுகணை மற்றும் பேரழிவு ஆயுத உற்பத்திக்கான தடை அமுலுக்கு வந்தது.

எனினும், ஐ.நா., பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை வடகொரியா நிராகரித்துவிட்டது. இதுகுறித்து ஐ.நா.வுக்கான வட கொரிய தூதர் பாக்கில் யான் கூறும்போது, தீர்மானத்தை முழுமையாக நிராகரிக்கிறோம்.

ஏவுகணை தயாரிக்கும் தனது நடவடிக்கைகளை வடகொரிய ராணுவம் தொடரும். மேலை நாடுகள் அரசியல் காரணங்களுக்காக ஐ.நா., பாதுகாப்பு சபையைப் பயன்படுத்தி உள்ளன - என்றார். (202)

## ஆசிரியர்களுக்குப் பதிலாக ரோபோக்கள் கற்பிக்கும்


வாஷிங்ரன்,ஜூலை18

அடுத்த சில ஆண்டுகளில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் கற்பிக்கமாட்டார்கள். ஆனால்,கண்காணித்துப் படிக்க வைப்பதற்கு ரோபோ ஆசிரியர்கள் வரப்போகிறார்கள்.

ரோபோ ஆசிரியர்களை உருவாக்குவதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த ரோபோ ஆசிரியர்களை மைக்ரோசொப் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இதற்கென அமெரிக்காவின் பிரபல தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் அட்லாண்டா கம்ப்யூட்டிங் கல்லூரியுடன் மைக்ரோசொப்ட் நிறுவனம் இது தொடர்பான ஆராய்ச்சிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது

(202)

உலக அரங்கில்



ஜப்பானில் டோக்கியோ நகரிலுள்ள தொழில்நுட்ப கல்வி நிலையமும் பன சொனிக் நிறுவனமும் இணைந்து பற்றரியால் இயங்கும் புதிய விமானத்தை தயாரித்துள்ளன.

## மாதம் ஒரு மொழி அழிகின்றது

வாஷிங்ரன்,ஜூலை18

உலகம் முழுவதும் தற்போது பேசப்படும் மொழிகளில் மாதம் ஒரு மொழி அழிந்து வருவதாக ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

வாஷிங்ரனில் அமைந்துள்ள சர்வதேச சுற்றுச் சூழல் அறிவியல் கண்காணிப்பகம் உலக அளவில் பேசப்படும் மொழிகள் குறித்து முக்கிய ஆய்வொன்றை நடத்தியது. அந்த ஆய்வின் முடிவிலேயே அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஆய்வின்படி-

உலகம் முழுவதும் தற்போது பேசப்படும் ஏழாயிரம் மொழிகளில் மாதம் ஒரு மொழி அழிந்து வருகிறது. இந்த நிலை நீடித்தால் இன்னும் 100 ஆண்டுகளில் பாதிக்கும் மேற்பட்ட மொழிகள் அழிந்து இரண்டாயிரத்து 500 மொழிகளே எஞ்சியிருக்கும் நிலை ஏற்படும்.

உலகில் அதிகமாக பேசப்படும் பத்து மொழிகளில் இந்தி மற்றும் வங்காள மொழிகள் இடம்பெற்றுள்ளன. மாந்தரின், ஆங்கிலம், ஸ்பானிஷ், ரஷ்யன், அரபிக், போர்ச்சுகீஸ், மலாய் - இந்தோனேசியன் மற்றும் பிரெஞ்ச் ஆகியன மீதமுள்ள எட்டு மொழிகள்.

ஆபிரிக்கா மற்றும் பசுபிக் கண்டங்களை அடுத்து ஆசியாவில் அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன. பப்புவா நியூகினியா நாட்டில் 820 மொழிகளும் இந்தேனேசியாவில் 742 மொழிகளும் பேசப்படுகின்றன. நைஜீரியாவில் 516, இந்தியாவில் 427, அமெரிக்காவில் 311, மெக்சிகோ, கேமரான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் தலா 300 மொழிகளும் பேசப்படுகின்றன. (202)

## சீனாவில் புயல் மழை : 97பேர் உயிரிழந்தனர்!

பெஜ்ஜிங்,ஜூலை18

சீனாவில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் புயல் மழையால் 97பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

சீனாவை பிளிஸ் என்ற சூறாவளி தாக்கியுள்ளது. அதன் விளைவாகப்பெரும் மழை பெய்து வருகின்றது.

மழை,வெள்ளம் காரணமாக 97பேர் உயிரிழந்துள்ளனர்.31ஆயிரத்து 400 வீடுகள் சேதமடைந்தன.

ஹினான், குவாங்டாங், பியூ ஜீ ஜியாள், ஜீ ஜீயாங் ஆகிய மாநிலங்களே மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

(202)

# மீண்டும் 'பொடா' சட்டமா? பழ.நெடுமாறன் கண்டனம்

சென்னை, ஜூலை 18

மீண்டும் 'பொடா' சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்திருப்பதை கண்டித்திருக்கிறார் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன்.

இது தொடர்பாக நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பயங்கரவாதத்தை ஒடுக்க 'பொடா' சட்டத்தைத் திரும்பக் கொண்டுவர வேண்டும் என்று அ.தி. மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ளார். அவர் முதலமைச்சராக இருந்தபோது அரசியலில் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைப் பழிவாங்க 'பொடா' சட்டத்தைப் பயன்படுத்தினார்.

களையை எடுப்பதாகச் சொல்லி பயிரைப் பிடுங்கி எறிந்த கதையாக தவறான செயலில ஈடுபட்டார்.

என் மீதும், எங்கள் தோழர்கள் மீதும் 'பொடா' சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பதற்கான வழக்கு ஆதாரம் எதுவும் இல்லையென்று உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட மறுஆய்வுக்குழு திட்டவட்டமாகக் கூறியது. ஆனால், இந்தத் தீர்ப்பை ஏற்பதற்கு பதில் அதை எதிர்த்து ஜெயலலிதா அரசு உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

உயர் நீதிமன்ற விசாரணையில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஏறத்தாழ 525 நாள்களுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டு நாங்கள் அடைந்த துன்பத்தை யார் ஈடு கட்டுவது? நாங்கள் அனுபவித்த கொடுமைகளுக்கு யார் பொறுப்பு?

பயங்கரவாதத்தை ஒடுக்க குற்றவியல் சட்டங்களில் போதுமான பிரிவுகள் உள்ளன. ஆனாலும், எதேச்சாதிகாரமாக ஆட்சி நடத்த விரும்புபவர்கள்தான் பொடா போன்ற கறுப்பு சட்டங்களைப் பயன்படுத்த முற்படுவார்கள்.

அவசர காலத்தில் நிகழ்த்தப்பட்ட கொடுமைகளுக்காக முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார். அதைப்போல 'பொடா' போன்ற கறுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிராளிகளை வதைத்த ஜெயலலிதா மறுஆய்வுக்குழு அளித்த தீர்ப்புக்குப் பின்னால் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டிருக்க வேண்டும். ஆனாலும், தனது கடந்தகாலத் தவறை அவர் கொஞ்சமும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. மாறாக மீண்டும் 'பொடா' சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கூறுவதன் விளைவை காலம் அவருக்கு உணர்த்தும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# இஸ்ரேலின் விமானத் தாக்குதலில் ஹிஸ்புல்லா இயக்கத் தலைவர் பலி!

## இஸ்ரேல் தொலைக்காட்சி தெரிவிக்கின்றது

ஜெருசலேம்,ஜூலை18

லெபனான் தலைநகர் பெய்ரூட் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் சரமாரியாக குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்திய தில் ஹிஸ்புல்லா தீவிரவாத இயக்கத் தலைவர் காயமடைந்தார் என இஸ்ரேல் தொலைக் காட்சி தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்-லெபனான் எல்லைப் பகுதியில் அண்மையில் இஸ்ரேல் ராணுவத்தினருக்கும், லெபனானை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஹிஸ் புல்லா தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் இஸ்ரேல் ராணு விரர்கள் எட்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேலும் இரண்டு வீரர்களை ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் பிடித்துச் சென்றனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் ராணுவத்தினர் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள சர்வதேச விமான நிலையம் மீது வெடிகுண்டுகளை வீசி தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இஸ்ரேலிய தொலைக் காட்சி ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்:-

இஸ்ரேல் ராணுவத்தினர் பெய்ரூட்டில் நான்காவது நாளாக நேற்றும் விமான தாக்குதலில் ஈடுபட்டனர். இந்த வேட்டையில் ஹிஸ்புல்லா தீவிரவாத இயக்கத்தின் தலைமையகம் தகர்க்கப்பட்டது. இதில், தீவிரவாதத் தலைவர் ஹசன் நசரல்லா படுகாயமடைந்தார் என தெரிவித்துள்ளது.

(202)

# வளரும் நாடுகளின் மின்சாரம், எரிபொருள் தேவைகளை பூர்த்திசெய்வதற்கு உதவுவதாக ஜி - 8 நாடுகள் உறுதி

மொஸ்கோ,ஜூலை,18

வளரும் நாடுகளிலுள்ள 400 கோடி மக்களின் எரிபொருள், மின்சாரம்போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சகல வசதிகளும் ஏற்படுத்தப்படும் என்று ஜி- 8 நாடுகளின் தலைவர்கள் உறுதியளித்துள்ள னர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற ஜி - 8 நாடுகளின் உச்சிமாநாட்டில் அந் நாடுகளின்தலைவர்கள் கையெழுத்திட்டு வெளியிட்ட பிரகடனத்திலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளரும் நாடுகளில் எரிபொருள் வசதியில்லாத 240 கோடி மக்களும் மின்சார வசதி இல்லாத 160 கோடி மக்களும் வாழ்கின்றார்கள். இம் மக்களின் தேவை களைப் பூர்த்திய செய்வதற்கு ஜி - 8 நாடுகள் முன்வந்துள்ளது.

(202)

# பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளை தனிமைப்படுத்த மன்மோகன் வலியுறுத்து

ரஷ்யா,ஜூலை,18

பயங்கரவாதத்தை ஆதரிக்கும், பயங்கரவாதிகளுக்கு உதவும் நாடுகளைத் தனிமைப்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார்.

ஜி - 8 நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக புதுடில்லியிலிருந்து மன்மோகன் சிங் ஆயத்தமான போது செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:-

பயங்கரவாதத்தை சகித்துக்கொள்ளவே முடியாது என்று உறுதியான நிலைப்பாடு எடுக்கப்பட வேண்டும். சமீபத்திய மும்பை குண்டு வெடிப்பு சம்பவம் போன்ற பயங்கரவாத செயல்களை சர்வதேச சமூகம் வெளிப்படையாக கண்டிக்க வேண்டியது அவசியம்.

பயங்கரவாதக் குழுக்களை தனிமைப்படுத்தவும் பயங்கரவாதம் எங்கு நடைபெற்றபோதிலும் அதற்கு கண்டனக்குரல் எழுப்பவும் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். இதற்கு சர்வதேச சமுதாயம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதில் எவ்வித சமரசத்திற்கும் இடமளித்து விடக்கூடாது.

பயங்கரவாதிகளை எதிர்கொள்ள பொடா சட்டம் ஒன்றே வழி என்பது உண்மை இல்லை. அதை தவிர்த்து பல்வேறு வழிகள் உள்ளன. பயங்கர வாதத்திற்கு எதிரான போரில் வெற்றி பெற அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். நாட்டின் உளவு அமைப்பு மேம்படுத்த வேண்டும் என்பது உண்மைதான் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (202)



இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்ற மக்கள் தங்குவதற்கு இடமின்றி மேட்டுப்பாளையத்தில் திறந்த வெளிகளில் தங்கியிருப் பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபெரும் ஏல விற்பனை

எமது ஆலய இராஜகோபுர கட்டட நிர்மாண வேலைகளுக்கு பாவிக்கப்பட்டு கழற்றப்பட்ட, பாவித்து எஞ்சிய பாவனைக்கு மிகவும் உகந்த நிலையில் இருக்கும் மிக நீண்ட 300 காயாந்தடிகள், தேக்கம் தடிகள், சட்டரிங் பலகைகள், கண்டாவளை மணல், செங்கற்கள், நீர் இறைக்கும் மோட்டர், T.V. தூண் அச்சுப்பெட்டிகள் இன்னும் பல பொருள்கள் பனிப்புலம், பண்டத்தரிப்பு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய முன்றிலில் எதிர்வரும் 21.07.2006 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

*குறிப்பு: முன்கூட்டியே பொருள்களை பார்வையிட விரும்புவோர் மேற்குறித்த ஆலயத்தில் எந்த நேரமும் பொருள்களைப் பார்வையிடலாம்.*

இராஜகோபுர திருப்பணி குழுவினர்
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்,
பனிப்புலம் , பண்டத்தரிப்பு

(52345)(21.11.17)

## மரண அறிவித்தல்

### திருமதி நடராசா நாகரத்தினம் *(மணி)*

மருதங்கேணி வீதி, கிராமக்கோட்டடி, பருத்தித்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி நடராசா நாகரத்தினம் நேற்று (17.07.2006) அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி- இராசம்மா தம்பதியரின் மூத்த மகளும் ஏரம்பு சின்னத்துரை நடராசாவின் (உரிமையாளர், விஷ்ணு பாட்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் விஷ்ணுகுமார் (லண்டன்), காலஞ்சென்ற விஷ்ணுமூர்த்தி மற்றும் விஷ்ணுராஜா (லண்டன்), விஷ்ணுகாந்தன் (லண்டன்), விஷ்ணுவானதி (லண்டன்), விஷ்ணுவைதேகி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கொழும்பில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

**இல.44, இராசசிங்க வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06,
தொலைபேசி இல. 011 2360541.**

***தகவல்:***
**ஏ.சி.நடராசா
(கணவர்).**

(52346) (39.21.11.17)

## துயர்பகிர்கின்றோம்



07.07.2006 அன்று காலஞ்சென்ற ஏழாலை தெற்கு 'களபாவோடை' வசந்தபுரம் அருள்மிகு வசந்த .நாகபூஷணி அம்பிகை தேவஸ்தானத்தின் ஸ்தாபகராகிய அம்மன் தாயாரின் அன்புத் தாய்

### திருமதி சுந்தரம் செல்லத்துரை

அம்மையாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் மனச்சாந்தி பெற அன்னையை வேண்டுகின்றோம்

செ.கனகரத்தினம் குடும்பம்
உரும்பிராய்.
(வெண்புறா மினிபஸ்)

(52338)
(21.11.17)

## நெடுந்தீவில் நவோதய நிகழ்வு

நல்லூர், ஜூலை18

நவோதயா வாரத்தையொட்டி நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் பெற்றோர்கள், பழையமாணவர்களது சிரம தானப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மகாவித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நேற்று முன்தினம் சமய விழுமிய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.இதில் பிரதம விருந்தினர்களாக நெடுந்தீவு இந்து மத குரு பிரம்மஸ்ரீ கா.புவனேந்திர சர்மாவும் பங்குத் தந்தை அருட்திரு அ.அருள்நேசன் அடிகளாரும் சிறப்பு விருந்தினர் களாக ஓய்வுபெற்ற அதிபர் திருமதி ந.நாகேந்திரன், ஓய்வுபெற்ற காணி குடியேற்ற உத்தியோகத்தர் ச.முத் துக்குமாரு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(1-111)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அஞ்சலினா செபமாலை [இளைப்பாறிய ஆசிரியர்]



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் பலாலியை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி அஞ்சலினா செபமாலை அவர்கள் 16.07.2006 இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் அ.செபமாலையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி ஆனந்தம் - ஞானப்பு தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற திரு.திருமதி அகஸ்திஸ் அன்னம்மாவின் வளர்ப்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி அகஸ்தின் மேரியின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, அன்னம்மா, மரியபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செபமாலை, மரியாம்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் மேரிமல்லிகா (ஆசிரியர், புனித பத்திரிசிரியார் கல்லூரி), அ.அருட்பிரகாசம் (இத்தாலி), அ.அருளானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் யோண் அரியதாஸ் ஆன்றபேக்கா, ஜெயந்தி, சூசைதாசன் ஆகியோரின் அன்பு மாமியும் ஸ்ரலா திரேசாவின் சிறியதாயும் பிரேமரட்ணா, ஆன்ஸ்ரன், வார்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இல.228, குருசோ வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நல்லடக்க திருப்பலிக்காக நாளை (19.07.2006) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பின் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*228, குருசோ வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.*

(52337)
(24-11-14)

தகவல்:
திரு.சூ.யோண்அரியதாஸ் [மருமகன்],
திருமதி யோ.மேரி மல்லிகா [மகள் - ஆசிரியர்]

### செல்லத்துரை திருநாவுக்கரசு

**(Retired Electrical Engineer, SriLanka & Official Translator to the Canadian Immigration & Refugee Board, Toranto, Canada)**



சுண்டிக்குளியைப் பிறப்பிமாகவும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திருநாவுக்கரசு அவர்கள் 15.07.2006 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - செல்லம்மாவின் அன்பு மகனும் பவானியின் அன்புக் கணவரும் துளசி, திருமால் ஆகியோரின் அன்புத் தந்தையும் தீனா, மிதுலா ஆகியோரின் அன்பு மாமனும் பவீனா, ஈர்த்தனின் அன்புப் பேரனும் மறைந்த பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி), காலஞ்சென்ற சிவஞானமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தி, நித்தநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் .

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வியாழக்கிழமை 20.07.2006 அன்று கனடாவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

*மாலன் (கனடா)
+1 4169103008,
+1 4162863789.*

(52337)
(24-11-14)

தகவல்:
தெய்வி தபோதரன் [பேறாமகள்],
222 8338, 222 3616

## இலங்கை அரசு

வடக்கு - கிழக்கு மாகாண சபை
வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
கடன் இல : 2880 சி.இ.
தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
(நிர்மாண வேலைகள்)

### கேள்வி அறிவித்தல் கால நீடிப்பு

ஐ.எவ்.பி. இல. ஜே.எவ்./நீர்ப்-II/04 திகதி : 18.07.2006

1) வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்தும் பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி ஐ.டி.எ. (IDA) நம்பிக்கையின் கீழான வசதி

2) மாவட்ட செயலாளர் யாழ்ப்பாணம் இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

3) மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா **1000/=** ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 25.07.2006 ஆம் திகதி 15.00 மணி வரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

4) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் பிரதம பொறியியலாளர் (கட்டடங்கள்) யாழப் பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர்
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி / தொலைநகல் இல. 021 - 2222632

5) சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக் குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும், அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செய லாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 28.07.2006 ஆம் திகதி 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதே தினம், கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதேயிடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.

6) வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

விவர அட்டவணை

| கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| ஜே.எவ்.நீர்ப்II/டிஸ்/06 | வேலணை பிரதேச செயலக கட்டட விரிவாக்கம். | 1000.00 | 57,500.00 | 04 மாதம் |
| ஜே.எவ்/நீர்ப்-II/எவ்ரிசீ/01 | மீனவர் பயிற்சி நிலையம் நிர்மாணித்தல், வேலணை. | 1000.00 | 176,500.00 | 09 மாதம் |
| ஜே.எவ்.நீர்ப்II/ஏஜிஏ.குவா/01 | உதவி அரசாங்க அதிபர் விடுதி (தரம் 5) நிர்மாணம் மருதங்கேணி. | 1000.00 | 62,500.00 | 05 மாதம் |
| ஜே.எவ்/நீர்ப்-II/எஸ்ரி.குவா/02 | உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகத்தர் விடுதி நிர்மாணம், மருதங்கேணி. | 1000.00 | 57,500.00 | 04 மாதம் |

7) கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாண குறிப்புகள் 4 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

கே.கணேஷ்
அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்.

(சி/50270)

## மரண அறிவித்தல்



### திருமதி சிவஞானபூரணி வைத்தியலிங்கம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானபூரணி வைத்தியலிங் கம் அவர்கள் 15.07.2006சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு வைத்தியலிங்கம் (உரிமையாளர், வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் திருநிலைநாயகி, கே.வி. மகேந்திரன் (சட்டத் தரணி), விமலநாயகி, சொரூபராணி, தவராணி, கமலராணி, இந்தி ராணி, கே.வி.சுசீந்திரன் (வைத்தியலிங்கம் சக நிறுவனம்), கே.வி.இரவீந்திரன் (கே.வி.ஆர். சென்ரர்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற கீர்த்திசிங்கம், காலஞ்சென்ற சிவராஜா, கனகரட்ணம், துவாரகன், சண்முகலிங்கம், சிறீஸ்கந்தராஜா, நந்தினி, பத்மலோஜினி, ஆகியோரின் அன்பு மாமியும் சசிகலா, சந்திரிகா, மோகனதாஸ், மகிந்தன், சாந்தினி, சேனாதிபதி, நரேஷ், நரேந்திரா, உமா, செந்தூரன், சைலேந்திரன், ஆரூரன், பிரதாயினி, பிரசாந்தன், பிரகலாதன், பிரவீன், அபிராமி, சஞ்சீவன், சரண்யா, வர்த்தனா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (19.07.2006) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 3 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*110, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6999.*

(சி/50264)

தகவல்:
***மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரிகா உயிருக்கு ஆபத்தாம்; புலனாய்வுத்துறை அறிக்கை

கொழும்பு, ஜூலை18

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சுக்கு அரச புலனாய்வுத் துறை அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் புலனாய்வுத்துறை இயக்குநர் கிரீத்தி கஜநாயக்க கையெழுத்திட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் பிரதி பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சந்திரிகாகுமாரதுங்கவுக்கு ஏற்பட்டுள்ள உயிராபத்துக் குறித்து அந்த அறிக்கையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை 18தடவைகள் சந்திரிகாவுக்கு இலக்குவைக்கப்பட்டதாகவும்-

தமிழ் மக்களின் பாரிய எதிரியாக இவர் கருதப்பட்டு அவரது நடவடிக்கைகள் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வருகின்றன என்றும்- அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதிக்கு உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (203)

# ஈழத்தமிழருக்கு அனுசரணை வழங்க வேண்டுமென்ற துடிப்பு மிக்கவர் கருணாநிதி

## அமெரிக்காவில் வைத்து டாக்டர் இராமதாஸ் தெரிவிப்பு

அமெரிக்கா, ஜூலை18

ஈழத்தமிழர்களுக்கு அனுசரணையாக இருக்க வேண்டும் என்ற துடிப்பு தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிக்கு உண்டு.

இவ்வாறு அமெரிக்காவில் வைத்துத் தெரிவித்துள்ளார் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் இராமதாஸ்.

டாக்டர் இராமதாசுக்கும், முன்னாள் இணை அமைச்சர் மூர்த்திக்கும் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வரவேற்பு அளிக்கப்பட்டது. உலகத் தமிழர் அமைப்பினர் இந்த வரவேற்பை அளித்தனர். இதில் தமிழ் நாட்டுத் தமிழர்களும், ஈழத்தமிழர்களும் கலந்து கொண்டனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் தொடர்ந்து உரை நிகழ்த்திய டாக்டர் இராமதாஸ் - இந்தியாவில் முன்னைய காலங்களில் இருந்த ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்ற நிலை மாறி ''எங்கும் தமிழில்லை, எதிலும் தமிழில்லை'' என்ற நிலையே இருப்பதைக் கூறி ஈழக்கவிஞர் காசி ஆனந்தன் கூறியது போல ''தமிங்கிலமே'' காணப்படுகிறது.

இலங்கை அரசுக்கு 'ராடர்' கருவிகளை வழங்கிய இந்திய அரசின் முடிவு தவறானது. இனிமேல் அவ்வாறு எதுவும் நடைபெறாது.

ஈழத்தமிழர் தொடர்பாக இந்தியஅரசின் முடிவுகள் இனிமேல் வெளிப்படையாகவே எடுக்கப்படவேண்டும். இது தொடர்பாக இந்திய மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஈழத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமரை சந்திக்கவும் இந்திய நாடாளுமன்றக் குழுவினர் ஈழத் தமிழ்ப் பகுதிகளுக்குச் சென்று உண்மை நிலையை இந்திய மக்களுக்கு தெரிவிக்க வகை செய்யக் கோருவதுமான தீர்மானத்தை எமது கட்சி நிறைவேற்றி உள்ளது.

இன்றைய தமிழ்நாடு அரசு 'தமிழாய்ந்த தமிழர்' ஒருவரால் தலைமைப்படுத்தப்படுவது என்பதால் அது ஈழத்தமிழருக்கு ஆதரவாக இருக்கும். அந்த அரசுக்கும், ஈழத்தமிழர் விவகாரங்களில் மத்திய அரசும், மாநில அரசும் சாதகமான நிலை எடுப்பதற்கு நானும் உறுதுணையாக இருப்பேன்.

தற்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதியிடம் மிகப்பெரிய மாற்றத்தைக் காணமுடிகிறது. அவரிடம் தமிழ், தமிழர்கள், உலகத்தமிழர்கள் குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு அனுசரணையாக இருக்கவேண்டும் என்ற துடிப்பு இருக்கிறது. அத்துடிப்பைக் கூட்ட வேண்டியது எனது கடமை. எப்போது எல்லாம் கலைஞரது துடிப்பைக் கூட்டவேண்டுமோ அப்போது எல்லாம் கூட்டிக் கொண்டே இருப்பேன்.

தமிழீழம் பற்றிய மத்திய அரசின் நிலையானது தொடர்ந்தும் பேச்சுவார்த்தைக்கு அழுத்தம் கொடுப்பது, நேரடியான இராணுவத் தலையீடு இன்மை, தமிழர் மீதான இராணுவத் தாக்குதல்களுக்குப் பிரதமரின் கண்டிப்பான எதிர்ப்பு என்ற தொனியில் நீடிக்கும்.

எனினும் பிரதமரிடம் தொடர்ந்தும் ஒரு போதும் இந்தியாவின் நட்பு நாடாக ஸ்ரீலங்கா இருக்கப்போவதில்லை எனக் கூறிவருகின்றேன் -என்றார்.

தேசியத் தலைவரின் 50ஆவது வயது நிறைவையொட்டி வெளியிடப்பட்ட ''விடுதலைப் பேரொளி'' நூலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ''போரும் சமாதானமும்'' நூலும் அமெரிக்க உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் கருணாகரன் டாக்டர் இராமதாசுக்கு வழங்கினார்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



தாவடியைச் சேர்ந்த கலாநிதிகளான திரு திருமதி இராமநாதன் தம்பதிகளின் புதல்வன்

**இராமநாதன் பரந்தாமன்**

அவர்கள் இன்று 18.07.2006 லண்டன் கிறீன்விச் பல்கலைக் கழகத்தில் (Greenwich University) நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் **BIO MEDICAL SCIENCE Bsc(Hons)** பட்டம் பெறுவதையிட்டு மனதார வாழ்த்துவதுடன் மேன்மேலும் வாழ்வில் சிறப்படைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

இணுவில். (சி-50272)

**கணேசமூர்த்தி**
குடும்பத்தினர்.

## ஆனைக்கோட்டையில் வீடமைப்புக்கு பயனாளிகள் தெரிவு

நவாலி, ஜூலை18

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டைக் கிராம சேவையாளர் பிரிவில் முதற்கட்டமாக 22 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முதலாம் கட்ட கொடுப்பனவான 50ஆயிரம் ரூபா வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த வீடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய விளக்கக் கூட்டமொன்று சில தினங்களுக்கு முன்னார் ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தில் பிரிவு கிராம சேவையாளர் வை.சந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் சண்டிலிப்பாய் பிரிவுக்கு பொறுப்பான வீடமைப்பு உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். (100)

ஓம் சக்தி கணபதி துணை!
**ரவீன் பியூரோ**
(The Raveen Bureau)
கலைக்கல்வி நிலையம், எண்கணித சோதிட ஆய்வுமையம்
- அதிர்ஷ்டப் பெயர் மூலம் அதிர்ஷ்ட வாழ்வு பெறல்.
- ஆங்கிலமொழி கற்பித்தல்.
- கவின் கலைப் படைப்புகள்.
- வீட்டு அலங்காரம் (வாஸ்து சாஸ்திரப்படி).
அனைத்தும் மக்களின் தேவைக்காக சேவையாகவும் வழங்கப்படுகின்றது.
தொடர்புகளுக்கு : 0777 884163 (52292)
The Raveen Bureau
பழம் வீதி, கோப்பாய் தெற்கு, இருபாலை.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**சதாசிவம் இராமநாதன் J.P.U.M**

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

வவுனியா சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர் சதாசிவம் இராமநாதன் அவர்களின் மறைவையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மேல்நீதிமன்ற நீதிபதியும், ஊழியர்களும். வவுனியா.**

(சி/50268)

## எம் இனிய நண்பனை இழந்து நிற்கின்றோம்



அமரர் சதாசிவம் இராமநாதன் J.P.U.M
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

எம்முள் ஒருவனாய் அன்பனாய்
நண்பனாய் - எல்லார்க்கும் இனியனாய்
வழக்கிலே சமர் என்று வந்தால்
ஈடு கொடுக்க முடியாத எதிரியாய்
நின்று புகழ் பூத்த பெரியவனே!
உன் பிரிவு எம்மை நிலை குலைய
வைத்ததிங்கே - வாடி நிற்கின்றோம் நாம்!

வவுனியா சட்டத்தரணிகள்,
சட்டத்தரணிகள் சங்கம்
வவுனியா.

(சி-50269)

**A/L DAY CLASS**
கணித உயிரியல் பிரிவுகள்
Phy : G. பிரபா
Che : திரு.மணியம்
C-Ma : S.V. ஜயந்தன்
Bio : S. நித்தி
இடம்:
**SCIENCE CENTER**
நடைபெறுகின்றன.

அதிபர் சேவை-III இற்கான ஆள்சேர்ப்பு போட்டிப் பரீட்சை
வழிகாட்டல் வகுப்புகள்
- பொது அறிவு
- கிரகித்தல்
புதன், வியாழன், வெள்ளி
3.30- 5.30
**D.M.I**
(ஆரியகுளம் சந்திக்கு கிழக்கே)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
வடிவேல், மனோரமா நடித்த
இம்சை அரசன் 23ஆம் புலிகேசி
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-47139)

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்
ரிச்சட், மதுமிதா, நாசர் நடித்த
**நாளை**
சண்டைகள் நிறைந்த சித்திரம்
காட்சி நேரம் : 10.30, 2.30
(சி-49888)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கோபாலசிங்கம் விஜயலட்சுமி



அரியாலை கிழக்கை பிறப்பிடமாகவும், இல 865 நாவலர் வீதி அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசிங்கம் விஜயலட்சுமி நேற்று (17.07.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கோபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற முத்துசாமி-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்ரீரங்கன், சுகுமார், புனிதசோதி, பாஸ்கரன், கிருபாகரன், கிரிகரன், சிவநேசன் ஆகியோரின் அன்புத் தாயும் சியாமிளா, தயாளினி, ஸ்ரீசர்சன், சசிந்தினி, சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.07.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

865, நாவலர் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### அன்ரன் டென்சில்

பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்ரன் டென்சில் 16.07.2006 அன்று அகால மரணமானார்.

அன்னார் அவுறாம்பிள்ளை அன்ரன் காலஞ்சென்ற ஆன்சலா தம்பதியரின் அன்பு மகனும் சிறோன், ஆனந், சிறோமி, சாளின், டயானா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சியானியின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.07.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
குடும்பத்தினர்.

### திருமதி சின்னத்தம்பி முத்துப்பிள்ளை

கைதடி கிழக்கு கைதடியைச் சேர்ந்த சின்னத்தம்பி முத்துப்பிள்ளை நேற்று (17.07.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமு சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் சின்னத்தம்பி சுப்பிரமணியத்தின் அன்புத் தாயும் சின்னத்தம்பி நாகராசாவின் (லண்டன்) சிறியதாயும் சிவலிங்கராசா தனலட்சுமி, கணேசமூர்த்தி சந்தானலட்சுமி, அழகேசன் கிருபாலட்சுமி, சுப்பிரமணியம் பசீதன், சோபனா ஆகியோரின் பேர்த்தியும் யமுனா, கங்கா, தாரணி, தேவதேவன், கயனா, பிரதாபன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஊத்தல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
சி.சுப்பிரமணியம்
(மகன், செயலாளர், கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபை)

கைதடி கிழக்கு (சி/50273)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்காக தம்பிமாரை கூட்டிச்சென்று அவர்களைச் சுட்டுக்கொன்றது இராணுவம்

## தமிழகம் வந்த ஈழ அகதிப் பெண் கண்ணீர் மல்க தெரிவிப்பு

இராமேஸ்வரம், ஜூலை 18

விசாரணைக்காக எனது இரு தம்பிமாரை அழைத்துச் சென்ற இலங்கை இராணுவம் அவர்களைச் சுட்டுக்கொன்றது. உயிருக்குப் பயந்தே அகதிகளாக தமிழகம் வந்தோம்.

- இவ்வாறு கண்ணீர் மல்கத் தெரிவித்தார் இலங்கையிலிருந்து வந்த பெண் அகதியான மேரி ஜெயா. இலங்கையின் வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 71 அகதிகள் நேற்று முன்தினம் தனுஷ்கோடி அரிச்சல்முனைக் கடற்கரையில் வந்திறங்கினர். பொலிஸ் விசாரணைகளின் பின்னர் இவர்கள் மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பப்பட்டனர். இதன்பின்னர் அகதியான மேரி ஜெயா (வயது - 30) செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

கடந்த ஜூன் 14ஆம் திகதி எனது தம்பிமார் நிக்சன் மற்றும் யூட் ஆகியோர் மீன் பிடிக்கச்சென்றபோது அவர்களை இலங்கை இராணுவம் விசாரணைக்கு அழைத்துச் சென்று சுட்டுக்கொன்றது. வீடுகளில் இரவில் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. பேசாலை புனித வெற்றி மாதா ஆலயத்தில்தான் இதுநாள் வரை தங்கியிருந்தோம். அங்கேயும் இலங்கை இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத் தியதால் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இறந்த தம்பிகளுக்கு 31ஆவது நாள் பிரார்த்தனை முடித்து, வயதான எனது பெற்றோரை இலங்கையிலேயே விட்டுவிட்டு, பிள்ளைகளுடன் இங்கு அகதியாக வந்துவிட்டோம். இராணுவ நடவடிக்கைகள் முற்றிலும் நிறுத்தப்பட்டு அமைதி ஏற்பட்டாலே மீண்டும் இலங்கை செல்வோம்

- இவ்வாறு மேரி ஜெயா கூறினார். (05)



இந்தோனேசியாவில் ஜாவாக் கரையை பலமான ஆழிப்பேரலைகள் தாக்கியதை அடுத்து இடம்பெயர்ந்தவர்கள் ஒன்று திரண்ட போது

## மட்டு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கோயிலைச் சேர்ந்த கந்தையா கணேசன் (வயது 20) என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

திருக்கோயிலில் உள்ள தமது வீட்டில் மதிய உணவருந்தி விட்டு வேறு ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார் என்றும் -

அவரை வழிமறித்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டு அவரது மோட்டார் சைக்கிளைப் பறித்துக் கொண்டு தப்பிவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1)

## அக்கரைப்பற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் இரவு சுடப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை, இந்த இளைஞரின் சடலத்துக்கு அருகில் இரண்டு கைக்குண்டுகளையும் தாம் கண்டெடுத்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞரின் சடலம் பிரேதபரிசோதனைக்காக அக்கரைப்பற்று வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் ஒருவர் உயிரிழந்தார். காயமடைந்தவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. (1-151)

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது.

இதேவேளை -

பிரஸ்தாப சப் இன்ஸ்பெக்டரின் உறவினர்கள் நேற்று நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர். சப் இன்ஸ்பெக்டரைச் சந்தித்து அவர்கள் கலந்துரையாடி அவரது சுக துக்கங்களைக் கேட்டறிந்தனர்.

இவரது விடுதலை தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுவோம் என்றும் -

விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்த வந்துள்ளோம் என்றும் - அவர்கள் தெரிவித்தனர்.

கைதிகள் பரிமாற்றம் ஒன்று மூலமே பிரஸ்தாப சப் இன்ஸ்பெக்டரை விடுதலை செய்ய முடியும் என்றும் -

கடந்த சனிக்கிழமை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடன் நடத்திய பேச்சுக்களின்போது இது தொடர்பான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் - விடுதலைப் புலிகளின் ஊடகத் துறை தெரிவித்தது.

## வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அப்பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டின்போது பி.இந்திரகுமார் (வயது 30 – கன்னாதிட்டி), எஸ்.குமரன் (வயது 24) ஆகிய இருவரும் காயங்களுக்கு ஆளாகினர்.

காயமடைந்த நால்வரும் யாழ். மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். சம்பவம் நடைபெற்ற இடத்தில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

கிளைமோர்த் தாக்குதல் சம்பவத்தை அடுத்து மானிப்பாய் வீதி மற்றும் காங்கேசன் துறை வீதியூடாகப் பயணித்த இளைஞர்கள் பலரும் சீருடையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர் என்றும் -

வைத்தீஸ்வராக் கல்லூரிக்குள் புகுந்த சீருடையினர் மாணவர்களை தீவிர சோதனைக்கு உட்படுத்தினர் என்றும் - செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் - மேற்படி சம்பவத்தை அடுத்து யாழ்.நகரையும் அதனை அண்டிய பகுதிகளிலும் படையினர் தமது சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர். முக்கிய சந்திகளில் நின்ற படையினர் தேசிய அடையாள அட்டைகளைப் பரிசோதித்தனர். அத்துடன் உடற் பரிசோதனையும் நடத்தப்பட்டது. (ஐ-15-17-86-139)

## தமிழ் இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை இரவு இவர்கள் தமது வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்த போது நள்ளிரவு வேளையில் அங்குவந்த இனந்தெரியாத ஆயுதபாணிகள் இவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை இரவு இக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவங்களையடுத்து பட்டியடிச் சேனை கிராமத்தில் பெரும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (க)

## அதிகாரப் பகிர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

வேறு எந்தவொரு காரணத்திற்காகவும் அன்றி - அமைதி முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக - இரு பிரதான கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். அதற்கான நடவடிக்கைகளிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

இது விடயம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் விரைவில் பேச்சு நடத்தவுள்ளேன். எதிர்க்கட்சித் தலைவருடனும் பேசவுள்ளேன்.

எதிர்க்கட்சித் தலைவர் இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். அவர் நாடு திரும்பியவுடன் இலங்கை அரசியல் களத்தில் சில மாற்றங்கள் ஏற்படலாமென்று எதிர்பார்க்கலாம்.

எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஆளுங்கட்சிக்குள் உள்வாங்கப்படுவது நாடாளுமன்ற பலத்தை வலுப் படுத்துவதற்காக இருந்தாலும் அதனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அமைதி முயற்சிகள் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். அதேபோல் நாம் அரசுடன் இணைவது குறித்தும் தற்போது பேசப்படுகிறது. ஆனால் பதவி பட்டங்களுக்காக அரசில் இணைவதாக இது இருக்கக்கூடாது என்பதில் நாம் தெளிவாக இருக்கிறோம்.

இந்நிலையில் தான் நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் மற்றும் புதிய அரசமைப்பில் உள்வாங்கப்பட வேண்டிய 19 அடிப்படை அம்சங்கள் குறித்தான ஆவணத்தை நாம் தயார் செய்துள்ளோம். கட்சி உயர்மட்டத்தின் அங்கீகாரத்துடன் இதனை நாம் சில தினங்களில் வெளியிடுவோம் - என்றார் ரவூப் ஹக்கீம். (உ)

## இந்தோனேசியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)தாக்கிச் சேதப்படுத்தின.

கரையோரப் பிரதேசங்களில் இருந்து தப்பி ஓடி வந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பள்ளிவாசல்களிலும் வேறு பொது இடங்களிலும் தங்கி உள்ளனர் என்று உள்ளூர் அரச அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

பெரும் எண்ணிக்கையானயோர் காயமடைந்திருக்கின்றனர் என்று ஆழிப் பேரலை அனர்த்தத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

காணாமற்போய்விட்டனர் என அஞ்சப்படும் பெரும் எண்ணிக்கையானோரை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

நிலநடுக்கத்தின் தாக்கம் தலைநகர் ஜகாத்தாவிலும் உணரப்பட்டது. எனினும் அங்கு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

ஆழிப்பேரலை அபாயம் குறித்து பசுவிக் சுனாமி எச்சரிக்கைமையம் உடனடியாக எச்சரிக்கை செய்தது. இந்தோனேசியாவின் கரைகளையும் ஆஸ்திரேலியாவின் கரைகளையும் ஆழிப்போரலைகள் தாக்கக் கூடும் என்று அந்த நிலையம் அபாய அறிவிப்புச் செய்தது.

இந்தோனேசியாவின் மேற்கே அமைந்துள்ள அந்தமான, நிக்கோபார் தீவுகளிலும் ஆழிப்பேரலை அபாயம் குறித்து இந்திய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

மிகப் பரந்த அளவிலான ஆழிப்பேரலைகள் உருவாகும் அபாயம் இன்னும் கடந்து விடவில்லை என்று பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தனது இணையத்தளத்தில் தகவல் வெளியிட்டிருந்து.

இதேவேளை-

தமிழ்நாட்டின் காரைக்காலில் நேற்று மாலை கடல்நீர் திடீரென உள்வாங்கியதால் கடற்கரையில் இருந்த பொதுமக்கள் அச்சத்துடன் வேகமாக வெளியேற்றினர்.

காரைக்கால் கடற்கரையில் மாலை காற்று வாங்குவதற்காக பொதுமக்கள் திரண்டனர். நடை மற்றும் உடற்பயிற்சி செய்யவும் பலர் வந்திருந்தனர். கடற்கரையோரம் நின்றிருந்த சிலர் கடல் அலையின் வேகம் வழக்கத்துக்கு மாறாக வேகமாக இருந்ததைக் கவனித்தனர். சற்று நேரத்தில் கடல்நீர் படிப்படியாக உள்வாங்கியது.

இதனால் அச்சமுற்ற பொதுமக்கள் கடலோரத்திலிருந்து வெளியேறினர். கடற்கரையின் மற்ற இடங்களில் இருந்தவர்களையும் எச்சரித் தனர். கடல்நீர் சுமார் 10 மீட்டர் வரை உள்வாங்கியதைக் கண்ட பொதுமக்கள் வாகனங்களில் அவசரமாக கடற்கரையை விட்டு வெளியேறினர். மேலும் கடற் கரையை நோக்கி வந்தவர்களையும் திருப்பி அனுப்பினர். இதனால் காரைக் கால் கடற்கரை வாகனப் போக்குவரத் தின்றி வெறிச்சோடிக் கிடந்தது. இத்தகவல் நகர்ப்பகுதிக்கும் வேகமாக பரவியதால் பொதுமக்கள் அச்ச உணர்வுக்கு ஆளாயினர். (ஐ)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி யோகேந்திரன் (செந்தி)

ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி வல்வெட்டித்துறையை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி யோகேந்திரன் (செந்தி) அவர்கள் நேற்று (17.07.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் யோகேந்திரன் நாகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் மகான், பராசக்தி, தவச்செல்வி, சுபாசினி (யாழ்.பல்கலைக்கழகம், மூன்றாம் வருட முகாமைத்துவபீட மாணவி), சரஸ்வதி (மாணவி, வல்வை சிதம்பராக் கல்லூரி) ஆகியோரின் தந்தையும் தயாபரன், துரைசிங்கம் ஆகியோரின் மாமனும் மந்தாகினி, மதுகீர்த்தனா, வேல்மதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2006) பிற்பகல் 4 மணிக்கு அவரது நிரந்தர வதிவிடமான பொலிகண்டியில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

குடும்பத்தினர்.

Diploma in Computerized Accounting (With Manual Accounting)
MCS #MYOB #Quick Book Pro #Accpack
Supported By UNDP/JRRP 324, Palaly Road, Jaffna. 21.07.2006 வரை 50% சலுகை.

விமானப் பயணச் சீட்டு
★ முன்கூட்டிய பதிவுகளுக்கு சலுகைக் கட்டணம்
★ யாழ்.கொழும்பு துரித தபால் மற்றும் ஆவண சேவை
MANOJ AIR TOURS (PVT) LTD.
இல.32, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3916, 0777 517019, 0777 801038

உடனடி வேலைவாய்ப்பு!
MS Office, PhotoShop, PageMaker, CorelDraw விரிவுரையாளர்களும்,
Tamil Typing & English Typing அனுபவம் உள்ளவர்களும் வேண்டப்படுகின்றனர்.
நேரில் வரவும்.
CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org